Registered as a news paper.
பக்கங்கள்: பன்னிரண்டு
விலை ரூபா 10.00

நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்




மலர்:04 | திருவள்ளுவர் ஆண்டு: 2037 | தை 16 | ஹிஜ்ரி 1426 | துல்ஹஜ் 28 | (29.01.2006) | ஞாயிற்றுக்கிழமை | இதழ் 121

# வட-கிழக்கில் தமிழ்மக்கள் மீதான ராணுவ வன்முறைகள் அதிகரிப்பு!

## கண்காணிப்புக்குழு பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு —

வடக்கு-கிழக்கு பகுதிகளில் தமிழ் மக்கள் மீதான இராணுவ வன்முறைகள் அதிகரித்துள்ளதாக இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் ஹெலன் ஒலப்ஸ்டோட்ரயர் தெரிவித்தார். இந்தியாவிலிருந்து வெளியாகும் தெகல்ஹா வார இதழுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்-

கருணா குழுவுக்கு இலங்கை இராணுவம் உதவி செய்வது தொடர்பான ஆதாரங்கள் எம்மிடம் இல்லை. இருப்பினும், கருணா குழுவினரது இருப்பிடங்களை சில இராணுவ அதிகாரிகள் அறிந்து வைத்துள்ளனர் என்பது எமக்குத் தெரியும்.(12 ஆம் பக்கம் பார்க்க)

## வட - கிழக்கு மனித உரிமை மீறல்கள் விசாரணைசெய்வதற்கு விசேட குழு!

கொழும்பு —

இலங்கையின் வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகளை ஆராய மனித உரிமைகள் ஆணைக்குழு சார்பில் விசேட குழு அமைக்கப்பட்டுள்ளது.

அரச படையினரால் மேற்கொள்ளப்படும் கைதுகள், தேடுதல்கள் மற்றும் படுகொலைகளால் மக்களின் மனித உரிமைகள் மீறப்படுவதாகக் கிடைக்கும் முறைப்பாடுகள் அதிகரித்துள்ளன.

இந்த முறைப்பாடுகளை ஆராய்ந்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இந்த மூவர் அடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவின் தலைவராக ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி ரி.சுந்தரலிங்கம் செயற்படுவார். எம்.சி.எம். இக்பால் மற்றும் விசாகா தர்மதாச ஆகியோர் இந்தக்குழுவின் அங்கத்தவர்களாக இருப்பார்கள்.

வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் அடிக்கடி நடைபெறும் காணாமற்போதல்கள், படுகொலைகள், கைதுகள், தேடுதல் நடவடிக்கைகள், தடுத்து வைப்புக்கள் தொடர்பாகக் கிடைக்கும் முறைப்பாடுகள் குறித்து ஆராய்வதுடன் நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்து கிடைக்கும் முறைப்பாடுகள் குறித்தும் இந்தக் குழு ஆராயும்.

## துணைவேந்தர் பதவிக்கு மூவரின் பெயர்கள் சிபார்சு!

யாழ்ப்பாணம் —

யாழ். பல்கலைக்கழகத்துக்கான புதிய துணைவேந்தரை தெரிவுசெய்வதற்காக நடத்தப்பட்ட வாக்களிப்பில் பேராசிரியர் கே.கந்தசாமி அதிகளவு வாக்குகளைப் பெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸின் பதவிக்காலம் எதிர்வரும் மார்ச் 12 ஆம் திகதியுடன் முடிவடைவதையடுத்து புதிய துணைவேந்தரின் தெரிவுக்கான வாக்கெடுப்பு நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்றது.

இந்த வாக்கெடுப்பில் அதிகளவான வாக்குகளைப் பெற்ற மூன்று பேரின் பெயர்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு பரிந்துரைக்கப்பட்டது.

இந்த வாக்கெடுப்பில் பல்கலைக்கழகப் பட்டப்பின் படிப்புகள் பீடத் தலைவர் பேராசிரியர் கே. கந்தசாமி 17 வாக்குகளையும், விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் ஆர்.குமாரவடிவேல் 16

## லண்டன் திரும்பினார் பாலா!



## வவுனியாவில் கிரனேட் வீச்சு!

வவுனியா —

வவுனியாவில் நேற்றிரவு திருமண வீடொன்றின் மீது நடத்தப்பட்ட கைக்குண்டு வீச்சில் 4 பேர் காயமடைந்தனர்.

வவுனியா - கதிரேசு வீதியில் உள்ள வர்த்தகர் ஒருவரின் வீட்டின் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சைக்கிள் ஒன்றில் வந்த இனந்தெரியாத நபர் ஒருவர் இந்தக் கைக்குண்டை வீசிவிட்டுத் தப்பிச் சென்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## கொழும்பு நகரெங்கும் பாதுகாப்புக் கருவிகள்!

கொழும்பு —

கொழும்பில் தாக்குதல் அச்சத்தால் முக்கிய

களைப் பெற்ற மூன்று பேரின் பெயர்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு பரிந்துரைக்கப்பட்டது.

இந்த வாக்கெடுப்பில் பல்கலைக்கழகப் பட்டப்பின் படிப்புகள் பீடத் தலைவர் பேராசிரியர் கே. கந்தசாமி 17 வாக்குகளையும், விஞ்ஞான பிடாதிபதி பேராசிரியர் ஆர்.குமாரவடிவேல் 16 வாக்குகளையும், பெரதேனிய பல்கலைக்கழக பேராசிரியர் எஸ்.ராஜன்கூல் 15 வாக்குகளையும், பேராசிரியர் வி.நித்தியானந்தன்14 வாக்குகளையும், வவுனியா வளாகப் பேராசிரியர் திருமதி மகேஸ்வரன், கலாநிதி எஸ்.ராஜரட்ணம் ஆகியோர் தலா 5 வாக்குகளையும் பெற்றுக்கொண்டனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)



கிளிநொச்சி —

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கமும், அவரது துணைவியார் அடேல் பாலசிங்கமும் நேற்று கிளிநொச்சியிலிருந்து லண்டனுக்கு புறப்பட்டுச் சென்றனர்.

கிளிநொச்சியிலிருந்து இலங்கை விமானப் படைக் ஹெலிகொப்படர் மூலம் நேற்றுக்காலை 9.30 மணியளவில் அவர்கள் இருவரும் புறப்பட்டனர்.

இவர்களை தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன், தமிழீழ விடுதலைப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பு நகரெங்கும் பாதுகாப்புக் கருவிகள்!

கொழும்பு —

கொழும்பில் தாக்குதல் அச்சத்தால் முக்கிய இடங்கள் அனைத்திலும் பாதுகாப்புக் கருவிகளை பொருத்த அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.

பாதுகாப்பு நிலைமையைக் கருத்தில் கொண்டு கொழும்பு நகரில் அமைந்துள்ள அமைச்சுக்கள், அரச அலுவலகங்கள், வங்கிகள் மற்றும் முக்கிய இடங்களில் பாதுகாப்புக் கருவிகளைப் பொருத்தி அந்த இடங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதே இந்த யோசனையின் நோக்கம் என்றும் பாதுகாப்பு அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்தன.

# அமெரிக்காவை கண்டித்து தமிழகத்தில் ஆர்ப்பாட்டம்!

சென்னை —

ஈழத் தமிழரை அச்சுறுத்தும் வகையில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் கொழும்பில் உரைநிகழ்த்தியதைக் கண்டித்து தமிழகத்தில் நேற்று ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக்குழு சார்பில் சென்னை, மதுரை, தஞ்சாவூர், கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் நேற்று ஆர்ப்பாட்டங்கள் நடைபெற் றன.

சென்னையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக்குழுவின் ஒருங்கிணைப்பாளர் பழ.நெடுமாறன் தலைமை வகித்தார்.

தந்தை பெரியார் திராவிடர் கழக துணைத் தலைவரும், முன்னாள் அமைச்சருமான ஆனூர் ஜெகதீசன், பொதுச் செயலாளர் விடுதலை க. ராசேந்திரன், விடுதலைச் சிறுத்தைகள் இயக்க பொதுச்செயலாளர் தொல். திருமாவளவன், மார்க்சிய பெரியாரிய பொதுவுடமைக் கட்சியின் தலைவர் வே.ஆனைமுத்து, தமிழ் தமிழர் இயக்க பொதுச் செயலாளர் தியாகு, மக்கள் கவிஞர் இன்குலாப், புரட்சிகர இளைஞர் முன்னணியின் நிர்வாகி தமிழ்மணி, தமிழத் தேசப் பொதுவுடமைக் கட்சியின் கி.வெங்கட்ராமன், தமிழ்த் தேசிய மார்க்சிய கட்சியின் இராசேந்திரசோழன், ஓவியர் புகழேந்தி உள்ளிட்ட 30 இற்கும் மேற் பட்ட இயக்கத்தின் நிர்வாகிகள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கண்டன உரைகளை ஆற்றினர்.

அமெரிக்கத் தூதுவரின் அச்சுறுத்தும் உரை மற்றும் தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு எதிரான இந்திய, அமெரிக்க உதவிகள் ஆகியவற்றைக் கண்டித்து இவர்கள் உரையாற்றினர்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை அரசாங்கத்துக்கும் இடையேயான போர்நிறுத்த ஒப்பந்த சரத்துக்கள்

(11 ஆம் பக்கம் பார்க்க)

# இரு தரப்பும் மீண்டும் போருக்கு போகக்கூடாது

## பாப்பரசரின் பிரதிநிதி வேண்டுகோள்

மன்னார் —

கடந்த இரண்டு தசாப்தங்களாக இந்த நாட்டில் நடைபெற்ற யுத்தம் போதுமானது. இந்த நிலையில் இந்த நாட்டை மீண்டும் யுத்தம் ஒன்றிலிருந்து காப்பாற்ற வேண்டுமானால் - சம்பந்தப்பட்ட இரண்டு தரப்பும் மீண்டும் யுத்தமொன்றை ஆரம்பிக்கக் கூடாது என பரிசுத்த 16 ஆவது பெனடிக்றின் பிரதிநிதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மன்னார் மறை மாவட்டத்தின் 25 ஆவது ஆண்டு விழா நேற்று மன்னார் தோட்டவெளி தேவாலயத்தில் நடைபெற்றது. இதில் பங்கேற்று உரையாற்றிய

(12 ஆம் பக்கம் பார்க்க)


(APC) ஆனந்தா பிறைவேற் கிளினிக்

எமது சேவைகள் 1. ஓ.பி.டி [O.P.D] 2. ஆய்வுகூடம் 4. கிளினிக் 5. பார்மசி 5. உடற்பயிற்சி [நோயாளிகளுக்கு]

173, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

(C/4385)

தொலைபேசி: 021-222 8144

ஆலோசனை நேரம்:
(திங்கள் முதல் சனி) காலை 6.00 முதல் இரவு 9.00 வரை
ஞாயிறு காலை 6.00 முதல் காலை 10.00 வரை
ஞாயிறு மாலை 5.00 முதல் இரவு 9.00 வரை



# மேஜர் கபிலனின் வித்துடல் விதைப்பு நிகழ்விலிருந்து...





## மேஜர் கபிலனின் வித்துடல் தரவை துயிலுமில்லத்தில் விதைப்பு

மட்டக்களப்பு —

இராணுவ உதவியுடன் துணை ஆயுதக் குழுவினரால் படுகொலை செய்யப்பட்ட மேஜர் கபிலனின் வித்துடல் நேற்றுமுன்தினம் தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது.

மேஜர் கபிலனின் வீரவணக்க நிகழ்வும் அங்கு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட விடுதலைப் புலிகளின் குடும்பிமலை தோட்ட இணைப்பாளர் ஓவியன் உரை நிகழ்த்துகையில் -

அரச படைகள் எம்மீது போரைத் திணிக்கின்றன. நோர்வே அனுசரணையாளர்களிடம் வழங்கிய உறுதிமொழியை மீறி எம்மை ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் அரச படையினர் ஈடுபடுகின்றனர்.

திகிலிவெட்டையைச் சேர்ந்த மேஜர் கபிலன் (வயது 33) என்ற பொன்னையா வேலுப்பிள்ளை கடந்த 15 ஆண்டுகாலமாக தன்னை விடுதலைப் புலிகளுடன் இணைத்துக் கொண்டவர் எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் பானு, தளபதி நாகேஸ், விடுதலைப் புலிளின் மட்டக்களப்பு மாவட்ட புலனாய்வுப் பொறுப்பாளர் கீர்த்தி, மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தயாமோகன் உள்ளிட்ட தளபதிகளும், போராளிகளும் பங்கேற்றனர்.

திகிலிவெட்டையிலிருந்து மேஜர் கபிலனின் வித்துடல் ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் விடுதலைப் புலிகளின் இராணுவ மரியாதையுடன் விதைக்கப்பட்டது.

## வீதி திருத்த வேலைகளுக்கு ஒன்றரை மில்லியன் ஒதுக்கீடு!

### மாநகர ஆணையாளர் தகவல்

அரியாலை —

யாழ். மாநகரசபைக்குட்பட்ட வீதிகளைத் திருத்துவதற்கு ஒன்றரை மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்துள்ளதாக மாநகர ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

அரியாலைப் பகுதியில் சாஸ்திரி வீதி, நொத்தாரிஸ் வீதி, ஸ்ரான்லி கல்லூரி முன் வீதி என்பன கடுமையாக சேதமடைந்துள்ளபோதிலும், அந்த வீதிகள் திருத்தப்படாமை குறித்துக் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது -

கடந்த வருடங்களில் கட்டம் கட்டமாக வீதிகள் திருத்தும் பணி இடம் பெற்று வந்துள்ளது. இதன் நிமித்தம் மேற்கூறப்பட்ட வீதிகளோடு இன்னும் பல வீதிகள் திருத்தப்படாத நிலையில் உள்ளன. இவற்றை இந்த வருடம் எமக்கு ஒதுக்கப்பட்ட நிதிகளைக் கொண்டு கட்டம் கட்டமாக திருத்த தீர்மானித்துள்ளோம்.

அரியாலையின் பல இடங்களில் வீதி விளக்குகள் இணைப்பதற்கு தற்போது எம்மிடம் நிதியில்லை. நிகொட் நிறுவனத்திடம் நிதி தரும்படி கோரிக்கை விடுத்துள்ளோம்.

இதற்குரிய பதில் அந்த நிறுவனத்திடமிருந்து எமக்கு இதுவரை கிடைக்கவில்லை. அந்த நிதி எமக்குக் கிடைத்ததும் நாம் வீதி விளக்குகளையும் இணைப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (55)

## அகவிழி சஞ்சிகை நடத்தும் ஆய்வுக் கட்டுரைப் போட்டி

யாழ்ப்பாணம் —

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு (மார்ச் 8) அகவிழி சஞ்சிகை ஆய்வுக் கட்டுரை போட்டியொன்றை நடத்தவுள்ளது.

'பாடநூல்களில் பால்நிலை: ஒரு விமர்சனப் பார்வை' என்னும் தலைப்பில் (தரம் 6-11 வரையுள்ள தமிழ் அல்லது சமயம் அல்லது விஞ்ஞானம் அல்லது சமூகவியல் பாடநூல்களில் பால்நிலை விடயங்கள் எவ்வாறு கையாளப்படுகின்றன என்பதை இந்தக் கட்டுரையில் நிறுவுதல்.)

'ஆசிரியப் பணிகளில் பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள்'

'வெகுசனத் தொடர்பு சாதனங்களில் ஆசிரியைகள் பற்றிய சித்தரிப்பு'

'கலவன் பாடசாலைகளில் கற்பித்தலிலும், நிர்வாகத்திலும் பாடசாலைப் பண்பாட்டு உருவாக்கத்திலும் பால்நிலை வகிக்கும் பங்கு'

ஆகிய தலைப்புக்களில் ஆய்வுக் கட்டுரையை சமர்ப்பிக்க முடியும் எனத் தெரிவித்தார்.

இப்போட்டியில், முதலாம் இடத்தைப் பெறுபவருக்கு 15 ஆயிரம் ரூபா பரிசும், இரண்டாம் இடத்தைப் பெறுபவருக்கு 10 ஆயிரம் ரூபா பரிசும், மூன்றாம் இடத்தைப் பெறுபவருக்கு 5 ஆயிரம் ரூபா பரிசும் வழங்கப்படும்.

## விரிவுரையாளர் வெற்றிடங்களை நிரப்ப மானியங்கள் ஆணைக்குழு தீர்மானம்!

கொழும்பு —

இலங்கையிலுள்ள பல்கலைக் கழகங்களில் நிலவி வருகின்ற விரிவுரையாளர்கள் பற்றாக்குறையை நீக்குவதற்கு பல்கலைக்கழக மானியங்களின் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இந்தப் பற்றாக்குறை தொடர்பாக கல்வியமைச்சர் சுசில் பிறேம் ஜெயந்த - இலங்கையிலுள்ள பல்கலைக் கழக உபவேந்தர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலின்போது விரிவுரையார்களின் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் றஞ்சித் மெண்டிஸ் தெரிவித்தார்.

விரிவுரையாளர்களை சேர்த்துக் கொள்வதிலுள்ள தாமதங்கள் குறித்து கல்வியமைச்சருடனான சந்திப்பின் போது எடுத்துரைத்ததாகவும், விரிவுரையாளர்களை நியமிப்பதற்கான நிதியை திறைசேரியிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் ஆணைக்குழுவின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு பெப்ரவரி 15 வரை விண்ணப்பிக்கலாம்

கொழும்பு —

ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள இந்த ஆண்டுக்கான கல்விப் பொது தராதர உயர்தரப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தவறியவர்கள் - அடுத்த மாதம் 15 ஆம் திகதிவரை விண்ணப்பிக்க முடியும் என பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

உயர்தரப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தவறியவர்கள் இரண்டாம், மூன்றாம் தடவையாக பரீட்சைக்குத் தோற்றவுள்ள பாடசாலை மாணவர்கள் மற்றும் பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பிக்க முடியாதவர்கள் தமது விண்ணப்பங்களை அனுப்ப முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை பரீட்சார்த்திகள் தமது பாடசாலை அதிபர் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும். இதற்கான விண்ணப்பங்களை அண்மையிலுள்ள வலயக் கல்வித் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும் என்றும் - தனிப்பட்ட பரீட்சார்த்திகள் கடந்த 02.11.2005 ஆம் திகதி வெளியான பத்திரிகை அறிவித்தலுக்கு அமைவாக விண்ணப்பிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை கட்டணமாக 300 ரூபாவை அருகிலுள்ள பிரதேச செயலகங்களில் செலுத்தி, அதற்கான பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பிவைக்கவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கோழிகளுக்கு அம்மை தடுப்பூசி

யாழ்ப்பாணம் —

கந்தர்மடம் - பலாலி வீதியிலுள்ள கால்நடை வைத்தியசாலையில் ஒவ்வொரு மாதத்திலும் முதலாவது வெள்ளிக்கிழமைகளில் மட்டும் கோழிகளுக்கான அம்மைத் தடுப்பூசி ஏற்றப்படும் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

காலை 9 மணி முதல் 10.30 மணிவரை தடுப்பு மருந்து ஏற்றப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சங்கானையில் ஒரே இரவில் இரு வீடுகளில் துணிகர திருட்டு

யாழ்ப்பாணம் —

சங்கானை தேவாலய வீதியில் ஒரே இரவில் இரு வீடுகளின் ஜன்னல்களை உடைத்து உட்புகுந்த திருடர்கள் அங்கிருந்த பல இலட்சம் ரூபா பெறுமதியான நகைகள், மோட்டார் சைக்கிள் மற்றும் ஏனைய பொருட்களைத் திருடிச்சென்றனர்.

நேற்றுமுன்தினம் வெள்ளிக் கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் வீட்டின் அறை ஜன்னல் கம்பிகளைப் பிரித்தெடுத்து உள்ளே சென்றவர்கள் அங்கிருந்த பெறுமதிமிக்க கமரா, விலையுயர்ந்த உடுபுடவைகள் உட்பட பல பொருட்களை எடுத்துச் சென்றனர்.

தாயும் மகளும் மட்டுமே இந்த நேரத்தில் வீட்டினுள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தனர்.

இதேவேளை, இந்த வீட்டிற்கு எதிராக திருநெல்வேலி பாற்பண்ணைச் சபையில் கடமைபுரியும் ஒருவரது வீட்டு ஜன்னலும் இதே மாதிரி கம்பிகள் பிரித்தெடுத்து உட்புகுந்த திருடர்கள் அங்கிருந்த 8 பவுண் நிறையுடைய தாலிக்கொடி உட்பட உரிமையாளரின் சட்டைப் பையிலிருந்த பேர்சுடன் அடையாள அட்டையையும், 5000 ரூபா ரொக்கத்தையும் எடுத்துச் சென்றனர்.

திருடப்பட்ட தாலிக்கொடி, உடுப்புகள் போடப்படும் ஹங்கரில் கொழுவி அதற்கு மேல் பழைய உடுப்புகள் போடப்பட்டு மறைத்து வைக்கப்பட்ட நிலையிலும் களவுபோனமை குறிப்பிடத்தக்கது.

கடந்த ஓரிரு நாட்களுக்கு முன்னர் சங்கானையில் பொன்னாலை வீதியில் உள்ள வீட்டிலும் இதே பாணியில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்தில் இரண்டு பவுண் சங்கிலி ஒன்று இரவு வேளை அந்த வீட்டிலிருந்த பெண்ணின் கழுத்திலிருந்து திருடர்களால் அறுத்தெடுத்துச் செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தற்போதைய சூழ்நிலையில் இரவு நேரத்தில் பயத்தால் பொது மக்கள் வீட்டிற்கு வெளியே வராத சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இந்தக் களவுகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (48)

## அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம் —

பாண்டியந்தாழ்வு நரசிம்ம வைரவர் ஆலயத்தில் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 19 ஆம் திகதி முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

தொடர்ந்து 14 தினங்களும் மாலை 4.30 மணிக்கு அபிஷேகம், விஷேட பூசை, வசந்தமண்டப பூசை என்பன நடைபெற்று வருகிறது.

இறுதி நாளாகிய எதிர்வரும் 2 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு சங்காபிஷேகம் நடைபெற்று, மாலை 4மணிக்கு விஷேட பூசைகளும் இடம்பெறும். மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு பிராயச்சித்த அபிஷேகம் நடைபெற்று அன்னதானம் வழங்கப்படும்.

## இல்ல மெய்வல்லுனர் திறனாய்வு போட்டி

யாழ்ப்பாணம் —

அனலைதீவு - சதாசிவ மகாவித்தியாலய இல்ல மெய்வல்லுனர் திறனாய்வு போட்டி எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் கல்லூரி முதல்வர் வீ.ஓங்காரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ஊர்காவற்துறை கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ். பாஸ்கரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

## வருடாந்த பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் —

நயினாதீவு ஶ்ரீ பிடாரி அம்பாள் சனசமூக நிலைய வருடாந்த பொதுக் கூட்டம் இன்று பிற்பகல் 4 மணிக்கு நிலைய மண்டபத்தில் தலைவர் க. விஜேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் அனைத்து உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு செயலாளர் கேட்டுள்ளார்.

## ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்



பருத்தித்துறை —

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பிரதி அதிபர் என். குணசீலன் 35 வருட ஆசிரிய சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளார்.

1970 ஆம் ஆண்டு ஆசிரிய சேவையை ஆரம்பித்த இவர் - வவுனியா புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை, புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி ஆகிய பாடசாலைகளிலும், வடமராட்சி வலயக் கல்வி அலுவலக வள ஆளணியினராகவும், நெல்லியடி ஆசிரிய நிலைய முகாமையாளராகவும், விக்னேஸ்வராக் கல்லூரி தொலைக்கல்வி நிலைய சிரேஷ்ட போதனாசிரியராகவும் பணியாற்றிய பின்னர் ஹாட்லிக் கல்லூரியின் பிரதி அதிபராக பணியாற்றினார்.

இவர் ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க உறுப்பினராகவும், வடமராட்சி ஆசிரியர் சங்கச் செயலாளராகவும், பருத்தித்துறை நகரசபை வரியிறுப்பாளர் சங்கச் செயலாளராகவும், பருத்தித்துறை பிரஜைகள் குழுச் செயலாளராகவும், பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச்சபை உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார். (12)

# ஆளும் கட்சிக்குத் தாவிச்சென்ற எம்.பிக்கள் மீது நடவடிக்கை!

## ஐ.தே.க. செயற்குழு கூட்டத்தில் முடிவு

கொழும்பு—

கட்சி தாவிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ள ஐக்கிய தேசியக் கட்சி முடிவுசெய்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் எதிர்க்கட்சி கொறாடாவாக இருந்த மகிந்த சமரசிங்க - மகிந்த ராஜபக்ஷ வின் அரசாங்கத்தில் இணைந்ததை அடுத்து அந்தக் கட்சியின் செயற்குழு இந்த முடிவை எடுத்தது.

கொழும்பில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தின் பின்னர் ஊடகவியலாளரிடம் அந்தக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கூறியதாவது -

நாடாளுமன்ற எதிர்க்கட்சி கொறாடாவாக ஜோசப் மைக்கேல் பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார்.

அரசாங்கத்தில் அமைச்சர்களாக இணைந்துள்ள மகிந்த சமரசிங்க, ஹேகலிய ரம்புக்வெல ஆகியோர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க கட்சியின் செயற்குழு முடிவுசெய்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியில் சீரமைப்பு நடவடிக்கைகளின் ஒரு கட்டமாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட தலைவர் பதவி உருவாக்கப்படவுள்ளது.

அரசாங்கம் மேற்கொள்ளும் அமைதி முயற்சிகளுக்கு நிபந்தனையற்ற ஆதரவளிப்பது என்ற எமது நிலைப்பாட்டில் மாற்றமில்லை. எமது ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் அமைதி முயற்சிகளில் மேற்கொண்ட நிலைப்பாட்டையே மகிந்தவின் அரசாங்கமும் பின்பற்றி வருகிறது.

இருந்தபோதும், மகாவலி சபை மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனங்களில் அரசியல் ரீதியாக பணியிட மாற்றங்கள் மூலம் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் துன்புறுத்தப்படுவதை அரசாங்கம் நிறுத்தவில்லை.

எமது நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸநாயக்க இன்னமும் சிறையில் தான் உள்ளார். அதேவேளை - எமது உறுப்பினர்கள் அரசாங்கம் பக்கம் இழுக்கப்பட்டு வருகின்றனர்.

இந்தநிலையில் எமது கட்சியின் ஆதரவு அரசாங்கத்துக்குத் தேவையா இல்லையா என்பதை அறிய விரும்புகிறோம்.

கட்சி தாவிய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் அரசாங்கம் பக்கம் சென்றதை நியாயப்படுத்தியுள்ளார். இது நாட்டுக்கு நல்லதல்ல. அரசாங்கம் பக்கம் சென்றவர்களுக்காக 10 சொகுசு வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதுதான் நாட்டை முன்னேற்றும் தேசிய செயற்திட்டமா?

அரசாங்கம் பக்கம் ரோகித போகல்லாகம தாவியபோது அவரது கட்சி உறுப்பினர் பதவியை இரத்துச் செய்ய உயர் நீதிமன்றம் மறுத்தது. அந்த வழக்கில் எமது கட்சி தனது நிலைப்பாட்டைத் தெரிவிக்கத் தவறியதால் அந்தத் தீர்ப்பு வழங்கப்பட் டது.

12 பேர் கொண்ட அரசியல் விவகாரக்குழு அமைக்கவும் ஐ.தே.க வின் செயற்குழு தீர்மானித்துள்ளதென திஸ்ஸ அத்தநாயக்க மேலும் தெரிவித்தார்.

## கைக்குண்டு வீச்சு!

கொழும்பு—

மட்டக்களப்பு கல்லடியில் இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் துணை ஆயுதக் குழுவான ராசீக் குழுவின் உறுப்பினர் பாஸ்கரனின் வீடு மீது கடந்த வியாழனன்று கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

அடையாளம் தெரியாத நபர்கள் வியாழக்கிமை இரவு 9.30 மணிக்கு நடத்திய இந்தத் தாக்குதலில் பாஸ்கரனின் வீட்டின் ஒரு பகுதி சேதமடைந்தது.

# விடுதலைப் புலிகள் அமைப்பில் பெருமளவு சிங்கள இளைஞர்கள்!

## வவுனியா பொலிஸ் அதிகாரி

கொழும்பு—

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் பெருமளவிலான சிங்கள இளைஞர்களும் இணைந்துள்ளதாக வவுனியா பொலிஸ் நிலைய த் தலைமையக இன்ஸ்பெக்டர் அபயசிங்க பண்டா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் ஓமந்தைப் பிரதேசத்தில் சிங்கள இளைஞர் ஒருவரைக் கைதுசெய்து விசாரித்தபோது அவர் கொடுத்த தகவல் மூலமே இது தெரியவந்ததாக அவர் தெரிவித்தார்.

இவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஜெனிவாவில் சமாதான பேச்சுக்கள் குறித்து அனைத்துக் கட்சியுடனும் மகிந்த ஆலோசனை

கொழும்பு—

இலங்கை யுத்த நிறுத்த அமுலாக்கம் தொடர்பாக ஜெனிவாவில் நடைபெற உள்ள பேச்சுக்கள் குறித்து தென்னிலங்கையின் அனைத்துக் கட்சியினருடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஆலோசனை நடத்தவுள்ளார்.

கொழும்பில் ஊடகவியலாளர்களைச் சந்தித்த ஊடகத்துறை அமைச்சர் அனுரா பிரியதர்சன யாப்பா இவ்வாறு தெரிவித்தார்.


அவர் மேலும் கூறுகையில் -

அனைத்துக் கட்சியினரை சந்திக்கவுள்ள மகிந்த ராஜபக்ச தற்போதைய சூழ்நிலைகள் குறித்து விளக்குவார்.

பேச்சுக்களுக்கான அரசாங்க குழு தொடர்பாகவும் அவர் ஆலோசனை நடத்துவார். ஆசிய நாடு ஒன்றிலோ, இலங்கையிலோ பேச்சுக்கள் நடத்த வேண்டும் என்று ஜாதிக ஹெலஉறுமய, ஜே.வி.பி கட்சிகள் வலியுறுத்தினாலும் அந்தக் கட்சிகளின் இந்தக் கொள்கைகளை நாம் மதிக்கிறோம்.

இருப்பினும், இருதரப்பினரும் ஏற்கக் கூடிய இடமாக ஜெனிவா இருப்பதால் பேச்சுக்களுக்கு ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

இது நல்ல தொடக்கம் எனக் கருதுகிறோம். பேச்சுக்களுடே அடுத்த கட்ட நகர்வுகள் சிறப்பாக இருக்கும். யுத்த நிறுத்த அமுலாக்கப் பேச்சுகளுக்கான ஒழுங்குகளை வரையறை செய்வது கடினம். இன்னமும் அரசாங்கத்தின் சார்பிலான குழு தெரிவு செய்யப்படவில்லை.



பேச்சுக்களில் முஸ்லிம்களுக்கு தனித் தரப்பு என்ற கோரிக்கையை நாம் நிராகரிக்கிறோம்.

அரசாங்கப் பக்கம் ஐக்கிய தேசியக் கட்சியினர் வருவதற்கு அக்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கதான் பொறுப்பு. உட்கட்சி மோதலின் வெளிப்பாடாகத்தான் அவர்கள் அரசாங்கத்தில் இணைகிறார்கள். அது எங்கள் பிரச்சினையல்ல.

பொலிஸார் ஒருவரை தமிழீழ விடுதலைப்புலிகள் நல்லெண்ண நடவடிக்கையாக விடுதலை செய்துள்ளதை நாம் வரவேற்கிறோம். அதேபோல் மற்ற இரு பொலிஸாரையும் விடுதலைப்புலிகள் விடுதலை செய்வார்கள் என்று நம்புகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# நாட்டையும், கட்சியையும் காப்பாற்றுவதற்கு ரத்வத்த தலைமையில் திரளவேண்டும்!

## எல்லே குணவன்ச தேரர் வேண்டுகோள்

கொழும்பு—

நாட்டையும், கட்சியையும் காப்பாற்றுவதற்காக அனுருத்த ரத்வத்த தலைமையில் சுதந்திரக் கட்சியினர் ஒன்று சேரவேண்டும் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் இணைத் தலைவரும், கொழும்பு தர்மாராமய அதிபதியுமான எல்லே குணவன்ச தேரர் அறிவித்துள்ளார்.

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த நேற்று முன்தினம் ஆசீர்வாதம் பெறுவதற்காக கொழும்பு தர்மாராமயவுக்குச் சென்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எல்லே குணவன்ச தேரர் இது குறித்து மேலும் கூறியதாவது-

அரசாங்கத்தில் புதியவர்கள் இணைவதால் சுதந்திரக் கட்சிக்குப் பெரும் பாதிப்பு ஏற்படுகின்றது. அதனால் நாட்டையும், கட்சியையும் காப்பாற்றிக் கொள்வதற்காக அனுருத்த ரத்வத்த தலைமையில் அனைத்துச் சுதந்திரக் கட்சியினரும் ஒன்று சேர வேண்டும்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியானது இந்தநாட்டுக்கலாசாரத்தையும்பேணும் பௌத்த பிக்குமாருக்கு கௌரவம் செலுத்தும் எமது தனித்தன்மையைக் காப்பாற்றும் கட்சியாகும்.

எனினும், தற்போது கொள்கையற்ற பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த அரசியல்வாதிகளும், அரசசார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும், வெளிநாட்டு சக்திகளும், அரசாங்கத்துடன் இணைந்து அந்தக் கட்சியை அழிக்க முயல்கின்றனர்.

இந்த நேரத்தில் மகிந்த ராஜபக்ஷவின் கரங்களைப் பலப்படுத்துவதற்கு நாம் அனைவரும் அவருக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். எனினும், அதிகாரத்துக்கு வந்தது மட்டும் போதுமானதல்ல. அனைத்து இன மக்களும் சுதந்திரமாக, கௌரவமாக வாழக்கூடிய ஒற்றையாட்சியை ஏற்படுத்த மகிந்த விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேநேரம் தற்போது அரசாங்கத்தினுள் புகமுயலும் பல்வேறு சக்திகளிடமிருந்து அரசாங்கத்தையும், கட்சியையும் காப்பாற்றிக் கொள்வது குறித்து கவனம் செலுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# சமாதானப் பேச்சுக்களை குழப்பும் சக்திகளுக்கு இடமளிக்கக்கூடாது

## முப்படைத் தளபதிகளிடம் ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு—

சமாதான முயற்சிகள் அர்த்தமுள்ளதாகவும் பலம் வாய்ந்ததாகவும் முன்னெடுத்துச் செல்வதற்கு தடை ஏற்படுத்தக் கூடிய வகையில் முறையற்ற செயல்களுக்கு இடம் வழங்க வேண்டாமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முப்படைத் தளபதிகளுக்கும், பொலிஸ்மா அதிபருக்கும் நேற்று முன்தினம் ஆணை பிறப்பித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பித்து சமாதான முயற்சியை ஒழுங்கு முறையில் முன்னெடுத்துச் செல்வதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்போடு செயற்படும் இந்த நேரத்தில், சமாதானப் பேச்சுவார்த்தையைக் குழப்புவதற்கு ஒரு சில தீய சக்திகள் முயன்றுவருவதாக அரசுக்கு அறிக்கைகள் கிடைத்துள்ளன.

இதன் காரணமாக சமாதானப் பேச்சுவார்த்தையை குழப்பும் எந்தவொரு சக்திகளுக்கும் இடம் வழங்க வேண்டாமென ஜனாதிபதி முப்படைத் தளபதிகளுக்கும், பொலிஸ்மா அதிபருக்கும் ஆணை பிறப்பித்துள்ளதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காணாமற்போன படகுகள் முல்லைத்தீவில் கரையொதுங்கின!

முல்லைத்தீவு—

கடந்த வாரம் முல்லைத்தீவு கடற்பரப்பில் தொழிலுக்கு சென்ற இரண்டு மீனவர்களின் படகுகளும் சூட்டு காயங்களுடன் பலத்த சேதமுற்ற நிலையில் நேற்று முன்தினம் கரையொதுங்கியுள்ளன.

கடந்த வாரம் முதல் காணமற்போன மீனவர்கள்இதுவரை தொடர்பில்லாத நிலையில் அவர்களது படகுகள் முள்ளிவாய்கால் கடற்கரை பகுதியில் கரையொதுங்கியுள்ளதாக முல்லை மாவட்ட கடற்தொழிலாளர் சமாச தலைவர் மரியராசா தெரிவித்தார்.

இவர்களைக் கடற்படையினர் பிடித்துச் சென்றிருக்கலாமென்றும் படகைக் கொண்டு செல்ல முடியததால் துப்பாக்கியால் சுட்டுச் சேதப்படுத்தியிருக்கலாம் அதனால் படகு கரையொதுங்கி இருக்கலாம் என அவர் மேலும் தெரிவித்தார்.



மருதனார் மடத்தில் கேன் புற்றுநோயாளர் காப்பகத்தை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி நாடாவை வெட்டித் திறந்து வைப்பதையும், யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி காப்பகத்தின் பெயர்ப்பலகையைத் திறந்து வைப்பதையும், நிகழ்வில் கலந்துகொண்டோரையும் படங்களில் காணலாம்.

# இன்றைய ஒருநாள் போட்டியில் நதன் பிறக்கன் ஆடமாட்டார்!

சிட்னி—



இலங்கை அணிக்கு எதிராக இன்று பேர்த் மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டத்தில் அவுஸ்ரேலிய அணியின் பந்துவீச்சாளர் நதன் பிறக்கன் பங்குபற்றமாட்டாரெனத் தெரியவருகிறது.

தனிப்பட்ட காரணங்களுக்காகவே இவர் இந்தப் போட்டியில் ஆடமாட்டாரென அணியின் தேர்வுக் குழுத் தலைவர் ரெவர் ஹோன்ஸ் தெரிவித்தார்.

எனினும், அடுத்தவாரம் தென்னாபிரிக்க அணிக்கு எதிராக நடைபெறவுள்ள போட்டியில் இவர் விளையாடுவாரெனத் தெரியவருகிறது. அதேவேளை, இன்றைய ஆட்டத்திலும் அவுஸ்ரேலிய அணித்தலைவர் றிக்கி பொண்டிங் விளையாடமாட்டாரெனத் தெரியவருகிறது.

அடெலெய்ட்டில் நடைபெற்ற போட்டியிலும் இவருக்கு ஓய்வு வழங்கப்பட்டிருந்தது. இதனால், கில்கிறிஸ்ட் அணிக்குத் தலைமை தாங்கியிருந்தார். இந்தப் போட்டியில் அவுஸ்ரேலிய அணி 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, இன்றைய போட்டியில் இலங்கை அணி வீரர்கள் சனத் ஜெயசூர்ய மற்றும் மாவன் அத்தப்பத்து ஆகியோர் விளையாடுவார்கள். ஜெயசூர்ய உடல் உபாதை காரணமாக அடெலெய்ட்டில் நடந்த போட்டியில் விளையாடவில்லை. எனினும், இவர் உடல் நலம் தேறியுள்ளதால் அணிக்குத் திரும்பியுள்ளார்.

வியாழக்கிழமை நடந்த போட்டியில் களத்தடுப்பில் ஈடுபட்டிருந்த போது, இடைநடுவில் வெளியேறிய அத்தப்பத்துவும் தற்போது பூரண ஆரோக்கியத்துடன் உள்ளதால் இன்றைய போட்டியில் ஆடுவார். ஆனால் ருசிர பெரேராவின் உடல்நிலையில் போதிய முன்னேற்றம் ஏற்படாததால், மேலுமொரு வாரம் அவர் ஓய்வெடுப்பார்.

வி.பி.கிண்ணத்துக்காக நடைபெறும் இந்த முக்கோணப் போட்டித் தொடரின் முதல் 5 போட்டிகளில் 14 புள்ளிகளைப் பெற்று அவுஸ்ரேலிய அணி முதலிடத்திலும், இலங்கை அணி 5 போட்டிகளில் 9 புள்ளிகளைப் பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது. மூன்றாவது இடத்திலுள்ள தென்னாபிரிக்க அணி 4 போட்டிகளில் விளையாடி 8 புள்ளிகளைப் பெற்றுள்ளது.

இன்றைய போட்டியில் ஆடவுள்ள அணி வீரர்கள் :-

அவுஸ்ரேலிய அணி -


அடம்ஸ் கில்கிறிஸ்ட் (கப்டன்), சைமன் கடிச், பிரெட் ஹொட்ஜ், டேமியன் மார்ட்டின், மைக்கல் ஹூசே, மைக்கல் கிளார்க், அன்ட்ரூ சைமன்ஸ், ஜேம்ஸ் ஹொப்ஸ், பிரெட் ஹோக், பிரெட் லீ, ஸ்ரூவர்ட் கிளார்க், பிரெட் டோறி, கிளென் மக்ரா.

இலங்கை அணி -

மாவன் அத்தப்பத்து (கப்டன்), சனத் ஜெயசூர்ய, ஜெகான் முபாரக், உபுல் தரங்க, குமார சங்ககார, திலகரட்ண டில்ஷான், மைக்கல் வண்டோர்ட், மஹெல ஜெயவர்த்தன, சமிந்த வாஸ், ரசல் ஆர்னோல்ட், முத்தையா முரளிதரன், அகலங்க கனேகம, நுவான் குலசேகர, மலிங்க பண்டார.

# இந்திய வீரர்களுக்கு எதிராக கோஷம் எழுப்ப வேண்டாம்!

## யுனுஸ்கான் வேண்டுகோள்



பைசலாபாத்—

இந்திய வீரர்களுக்கு எதிராக கோஷம் எழுப்பவேண்டாமென்று ரசிகர்களுக்கு பாகிஸ்தான் அணியின் துணைக் கப்டன் யுனுஸ்கான் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்திய - பாகிஸ்தான் அணிகளிடையேயான 2ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி பாகிஸ்தானில் உள்ள பைசலாபாத்தில் நடைபெற்றது.

இந்தப் போட்டியை நேரில்காண வந்த பாகிஸ்தான் ரசிகர்களில் சிலர் பவுண்டரி எல்லையில் களத்தடுப்பை ஈடுபட்ட இந்திய வீரர்களுக்கு எதிராக அவ்வப்போது குரல் எழுப்பியவண்ணம் இருந்தனர். அத்துடன் இந்திய அணிக்கு எதிராக கோஷம் போட்டனர்.

இந்த நிலையில் பாகிஸ்தான் ரசிகர்களுக்கு அந்த அணியின் துணைக் கப்டன் யுனுஸ்கான் வேண்டுகோள் விடுத்துள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது -

வீரர்களுக்கு எதிராக கூட்டத்தில் சிலர் தொடர்ந்து குரல் எழுப்புவது சரியாகாது. இதனால் வீரர்கள் தொந்தரவுக்கு ஆளாவதுடன் விரக்தியும் அடையக்கூடும். இது போன்ற விமர்சனம் யாருக்கும் நல்லதல்ல.

நான் கூட்டத்தினருக்குச் சொல்லும் அறிவுரை என்னவெனில் - கூட்டத்தில் பெரும்பாலானவர்கள் நல்லபடியாக நடந்துகொள்வதுபோல் மற்றவர்களும் யாரையும் புண்படுத்தாமல், அணிக்குத் தொடர்ந்து ஆதரவு கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சிறந்த ஆட்டமான கிரிக்கெட்டை அனுபவித்துப் பார்க்க முயற்சி செய்யுங்கள். அது இந்தத் தொடருக்கு நல்ல சூழ்நிலையைக் கொடுக்கும் இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# பாகிஸ்தான் பந்தை எதிர்கொள்வதில் சச்சின் தன்னம்பிக்கை இழந்துவிட்டார்


## பாகிஸ்தான் அணி முன்னாள் கப்டன் மொயின்கான்

லாகூர்—

பாகிஸ்தான் அணியின் பந்துவீச்சாளர்களை எதிர்கொள்ளும் தன்னம்பிக்கையை இந்திய அணியின் நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர் கணிசமாக இழந்துவிட்டதாக பாகிஸ்தான் அணியின் முன்னாள் கப்டனும், விக்கெட் காப்பாளருமான மொயின்கான் தெரிவித்துள்ளார்.

பைசலாபாத்தில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியில் முதல் இனிங்ஸில் ஆடவந்த டெண்டுல்கர் 14 ஓட்டங்களை எடுத்திருந்த போது - சொகைப் அக்தர் வீசிய பந்து வலதுகை காப்பில் பட்டு விக்கெட் காப்பாளரால் பிடிக்கப்பட்டபோது, தானாகவே ஆடுகளத்தை விட்டு வெளியேறியிருந்தார். துடுப்பு இடது கையில் இருந்தநிலையில் வலதுகை காப்பில் பந்துபட்டதால், ஆட்டமிழப்பு இல்லாத நிலையிலும் நடுவர் அறிவிக்க முன்னரே டெண்டுல்கர் விலகிச் சென்றதால் உடனடியாகவே ஆட்டமிழந்ததாக அறிவிக்கப்பட்டார்.

அனுபவம்மிக்க வீரரான இவர், இவ்வாறு நடந்துகொண்டது குறித்து பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ளன. இந்தநிலையிலேயே மொயின் கான் மேற்படி கருத்தை வெளியிட்டுள்ளார். டெண்டுல்கர் பாகிஸ்தான் அணியின் பந்துவீச்சாளர்களை எதிர்கொள்வதற்கு தன்னம்பிக்கையை இழந்த நிலையிலேயே இவ்வாறு நடந்துகொண்டதாக மொயின் கான் தெரிவித்துள்ளார்.




டெண்டுல்கர் முன்னரைப்போன்றல்லாமல் இப்போது தன்னம்பிக்கை குறைந்தவராக ஆடிவருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டிருக்கிறார்.

# விளையாட்டு

# தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் துணைக்கப்டனாக அஸ்வெல் பிறின்ஸ்

சிட்னி—



தென்னாபிரிக்க அணியின் துணைத் தலைவராக அஸ்வெல் பிறின்ஸ் நியமிக்கப்பட்டிருக்கிறார். அணியின் துணைத் தலைவரான ஜக்கஸ் கலிஸ் காயம் காரணமாக நாடு திரும்பியதையடுத்தே பிறின்ஸ் இந்தப் பதவியில் நியமிக்கப்பட்டுள் ளார்.

22 வயதான இடதுகை துடுப்பாட்ட வீரரான இவர், தென்னாபிரிக்க ஏ அணியின் தலைவராக முன்னர் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# உலக நீச்சல்சம்பியன் தோர்ப் 2008 ஒலிம்பிக்குடன் ஓய்வு!

மெல்பேர்ன்—

அவுஸ்ரேலியாவின் ஒலிம்பிக் மற்றும் உலக நீச்சல் சம்பியனான இயன் தோர்ப் 2008ஆம் ஆண்டு பெய்ஜிங்கில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளின் பின்னர் ஓய்வு பெறவுள்ளதாக அறிவித்துள்ளார்.

25 வயதான தோர்ப் அவுஸ்ரேலிய பத்திரிகை ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியொன்றிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவுஸ்ரேலியாவின் மிகச் சிறந்த ஒலிம்பிக் வீரரான இவர், 2000ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக்கில் 17 வயதிலேயே 3 தங்கப்பதக்கங்களை சுவீகரித்தவர். பின்னர் 2004ஆம் ஆண்டு ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் மேலும் இரு தங்கப்பதக்கங்களை வென்றவர்.

13 உலக சம்பியன் பட்டங்களை வென்ற இவர், எதிர்வரும் மார்ச் மாதம் மெல்பேர்னில் நடைபெறவுள்ள கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றுவதற்காக தன்னைத் தயார்படுத்தி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்திய-பாகிஸ்தான் தொடருக்கான ஆடுகளங்களில் மாற்றம் வேண்டும்

## பாகிஸ்தான் முன்னாள் கப்டன் வக்கார் யுனுஸ்



கராச்சி—

இந்திய-பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான போட்டிகள் நடைபெறவுள்ள ஆடுகளங்களில் உடனடியாக மாற்றங்களைச் செய்யவேண்டுமென பாகிஸ்தான் அணியின் முன்னாள் பந்துவீச்சாளர் வக்கார் யுனுஸ் - பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்திய பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் லாகூர் மற்றும் பைசலாபாத் மைதானங்களில் நடைபெற்ற ஆட்டங்களில் மொத்தமாக 2791 ஓட்டங்கள் குவிக்கப்பட்ட அதேவேளை, 36 விக்கெட்டுக்கள் மட்டுமே வீழ்த்தப்பட்டன. முற்றிலும் துடுப்பாட்ட வீரர்களுக்குச் சாதகமாக இந்த மைதானங்கள் அமைந்திருந்ததாக வக்கார் யுனுஸ் குற்றம் சாட்டியுள்ளார். இது வேகப்பந்துவீச்சாளர்களுக்கோ சுழற்பந்துவீச்சாளர்களுக்கோ மட்டுமன்றி கிரிக்கெட் விளையாட்டுக்கே தவறானதொரு செயற்பாடாகும். என்னைப் பொறுத்தவரையில் ஒழுங்கு முறையிலான ஆடுகளம் ஒன்றே அமைக்கப்படவேண்டும். இது தொடர்பாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பாகிஸ்தான் - இந்திய அணிகளுக்கிடையிலான போட்டி உலகின் மிகச் சிறந்த தொடராக இருப்பதால், இதனை ரசிகர்கள் மத்தியில் ஆர்வத்துடன் பார்ப்பதற்கேற்ற வகையில் வழிவகைகள் செய்யப்படவேண்டும்.

கராச்சியில் நடைபெறவுள்ள போட்டிக்கான ஆடுகளம் உடனடியாக மாற்றம் செய்யப்படுமென நான் நம்பவில்லை. ஆனாலும் முதலிரு போட்டிகளும் சமனிலையில் முடிந்ததால், கிரிக்கெட் ரசிகர்கள் மற்றும் விமர்சகர்கள் மத்தியில் இது தொடர்பாக கடும் விமர்சனங்கள் எழுந்துள்ளன எனத் தெரிவித்தார்.

வக்கார் யுனுஸ் 1989ஆம் ஆண்டு தொடக்கம் 2003ஆம் ஆண்டு வரை பாகிஸ்தான் அணியின் சார்பில் 83 டெஸ்ட் போட்டிகளில் 373 விக்கெட்டுக்களைச் சாய்த்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பெனட் கிங்கின் பதவி மீளாய்வு செய்யப்படும்!

ட்ரினிடாட்—

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் பயிற்சியாளர் பெனட் கிங்கைத் தொடர்ந்தும் இந்தப் பதவியில் வைத்திருப்பதா என்பது குறித்து மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபை மீளாய்வு செய்யவுள்ளது.

அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த பெனர் சிங் 2004 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதல் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் பயிற்சியாளராக இருந்து வருகிறார்.

# வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி

மல்லாகம்—

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் கனிஷ்ட, சிரேஷ்ட பிரிவின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 31ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு அதிபர் பொ.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.


இந்த விழாவிற்கு பிரதம விருந்தினராக தெல்லிப்பழை கல்விக் கோட்ட கல்விப் பணிப்பாளர் கைலாசநாதனும், சிறப்பு விருந்தினராக முன்னாள் ஆசிரியர் செல்வராஜாவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (72)



மெல்பேர்னில் நடைபெற்ற அவுஸ்ரேலிய ஓபன் ரெனிஸ் தொடரின் பெண்கள் இரட்டையர் இறுதிப்போட்டியில் வெற்றிபெற்ற சீன ஜோடி யங்ஷி - ஷெங்ஜி ஆகியோர் வெற்றிக் கிண்ணத்துடன் காட்சியளிக்கின்றனர்.

# அன்பும், சமாதானமும் நிறைந்த வாழ்க்கையை வாழ்வதற்கேற்ற சூழலை உருவாக்க வேண்டும்

## யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை



சங்கானை——

போரினால் நாம் பட்ட அவலங்கள் மென்மேலும் எம்மைத் தொடரக் கூடாது. அன்பும், அமைதியும், சமாதானமும் நிறைந்த வாழ்க்கையை நாம் வாழ்வதற்கேற்ற சூழ்நிலை ஏற்பட வேண்டும்.

இவற்றை எவ்வாறு நாம் பெற்றுக் கொள்ளலாம்.

கோபத்தினாலோ, கடின வார்த்தைகளினாலோ எவரையும் நாம் வசீகரிக்க முடியாது. அன்பினால் மட்டும் தான் மக்கள் மனதை வென்றெடுக்கலாம். அன்பான வார்த்தைகளை நாம் பேசும்போது மற்றவர்களின் மனதை நாம் கவர்ந்து கொள்ளலாமென யாழ். மாவட்ட ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை குறிப்பிட்டார்.

சங்கானை புனித பிரான்சிஸ் சலேசியார் ஆலயத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வருடாந்த திருப்பலி நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தனதுரையில் -

உண்மையான நிலையை மக்களுக்கு நாம் உணர்த்துவதற்கு அன்பான வார்த்தைகள் ஒன்றே போதும். இந்த உலகத்தில் நாம் வாழ்ந்தாலும், உண்டு களித்து இருந்தாலும் ஆன்மிக வாழ்வை மேற்கொள்ளும் எவரும் மற்றவர்களிடத்தில் அன்பும் கொண்டவனாக இருப்பார். எங்களுடைய வாழ்கையில் சிறப்பானது என்ன? நாங்கள் இறைவனிடத்தில் அன்பு செலுத்துவதே. இறைவனை நாங்கள் அன்பு செய்தல் எமது ஒவ்வொருவரினதும் கடமையாக இருக்க வேண்டும்.

ஆண்டவனாகிய இறைவனை முழு மனதோடு, முழு உள்ளத்தோடு நேசிக்க வேண்டுமென்று எமது வேதம் மட்டுமல்ல சகல சமயங்களும் கூறுகின்றன.

ஆகவே, இறைவனுடைய அந்த அன்பை நாங்கள் உணர்ந்து அன்பு செய்ய வேண்டும். இறைவனை அன்பு செய்ய நாம் என்ன செய்ய வேண்டும்? தியானமோ, செபமோ செய்து எம்முடைய உள்ளங்களை அவன் பால் செலுத்தி, இறைவனின் அன்பில் நாம் உயர அழைக்கப்படுவோம்.

ஒரு மீன் உயிர் வாழத் தண்ணீர் வேண்டும். தண்ணீருக்கு வெளியே அதனை எடுத்தால் அது இறந்து விடும். அது போல நாம் உயிர் வாழ மூச்சு வேண்டும். இதற்காக இயற்கையின் காற்றை நாம் சுவாசிக்கின்றோம். இந்தச் சுவாசிப்பு இல்லையேல் நாம் உயிர் வாழ முடியாது. அவ்விதமாக இறைவனின் அன்பையும் நாம் பெற்றுக் கொள்ள அதற்கான வழிவகைகளை தேடிக் கொள்ள வேண்டும்.

இறைவனை நாம் அன்பு செய்கின்றோம் என்றால் நாம் ஒருவரை ஒருவர் அன்பு செய்கின்றோம் என்பதேயாகும். இறைவன் யேசு தனது சீடர்களை பார்த்து சொன்னார், "நீங்கள் என்னை அன்பு செய்வீர்களாயின், ஒருவரை ஒருவர் அன்பு செய்கின்றீர்கள். நாம் உங்களை அன்பு செய்கிறது போல, நீங்கள் ஒருவரை ஒருவர் அன்பு செய்யுங்கள். இதனால் நீங்கள் எனது சீடர்கள் என்று உல கம் அறிந்து கொள்ளும். இறைவனை நேசிப்பது போல் பிறரையும் நேசிக்க வேண்டும். பிறரையும் நாம் நேசிக்கும் போதுதான் எமது இறை அன்பு உறுதிப்படுத்தப்படும்.

இந்த பிறர் அன்பில் நாம் ஈடுபட என்ன தேவை? முதலாவதாக எங்களுடைய பெருமையை, தற்பெருமையை நாங்கள் அடக்கிக் கொள்ள வேண்டும். கர்வம், அகங்காரம், தற்பெருமை இருக்கும் இடத்திலே ஆண்டவன் உதவி செய்யமாட்டான்.

நான் மாத்திரம் நன்றாக இருக்க வேண்டும் என்றே ஒவ்வொரு மனிதனும் நினைக்கின்றான். இதனையும் நாம் நீக்க வேண்டும். இரண்டாவதாக நாம் எப்போதும் எம்மைப் பற்றியே சிந்தித்து கொண்டிருக்கின்றோம். சுயநலத்தை பற்றியே சிந்திக்கின்றோம். நான் நன்றாக வாழ வேண்டும், நாம் சொகுசாக வாழ வேண்டும். எனக்கு ஒரு வருத்தமும் வரக்கூடாது என்று இவ்விதமாக சுயநலவாதிகளாக இருப்போமானால், பிறருக்கு உதவ நாம் முன்வரமாட்டோம்.

இதற்கு நாம் என்ன செய்ய வேண்டும். இறைவனை நேசிக்க வேண்டும். இறைவனை நேசிக்கும் போது இந்த சுயநலம், தற்பெருமை எல்லாம் அன்று விடும். ஆலயங்களில் மட்டும் பிரார்த்தித்தால் போதாது. வீட்டிலும் பிரார்த்திக்க வேண்டும். வீட்டில் தனியாகவும் பிரார்த்திக்காமல், குடும்பத்தோடு பிரார்த்திக்க வேண்டும். காலை எழுந்தவுடனும், மாலையில் நித்திரைக்கு செல்லும் போதும் இறைவனைப் பற்றி யோசியுங்கள்.

எங்களுக்கு துன்பம் வருகின்ற நேரம் நாங்கள் இறைவனை யோசிக்கின்றோம். ஏன் நாம் எந்த நேரமும் இறைவனை நேசிக்கக் கூடாது. இறைவனை எந்நேரமும் பிரார்த்தித்தால் இறைவனின் அன்பு எமக்கு கிடைக்குமெனக் கூறினார்.

ஆயர் வாழ்க்கையில் 25வது யூபிலி நிகழ்வைக் கொண்டாடும், யாழ். மாவட்ட ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை ஆலயத்தின் பங்குத் தந்தையும், பங்கு மக்களும் வரவேற்று கௌரவிக்கும் நிகழ்வு நடைபெற்றது.

இதற்கு முன்பாக சங்கானைச் சந்தியிலிருந்து ஆலயம் வரை நடை பவனியாக பெருமளவு மக்கள் சூழ அழைத்து வரப்பட்டார். வருகின்ற வழியில் வீடுகள் தோறும் கும்பங்கள் வைத்து மாலை அணிவித்து வரவேற்றனர். (48)

# தொழிற்துறைத் திணைக்களத்தால் தொழிற்பயிற்சிக்கு விண்ணப்பம் கோரல்

கோப்பாய்——

தொழிற்துறை திணைக்களத்தின் வடக்கு - கிழக்கு மாகாண தொழிற் பயிற்சி நிலையத்தால் - திருகோணமலையில் இலவசமாக நடத்தப்படும் மோட்டார் இயந்திரவியல், கடைச்சல் இயந்திரவியல், வீட்டு மின் இணைப்பு, இயந்திர மரவேலை ஆகியவற்றுக்கு இந்த ஆண்டுக்கான பயிற்சிநெறிகளுக்கு இருபாலாரிடமும் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தத் தொழிற்கற்கை நெறிக்கு விண்ணப்பிப்போர் எட்டாம் தரம் வரை கல்வி கற்றிருப்பதுடன், பதினாறு வயதுக்கும் நாற்பது வயதுக்கும் இடைப்பட்டவராகவும் இருக்க வேண்டும்.

கற்கைநெறிகளில் மோட்டார் இயந்திரவியல் கடைச்சல் பயிற்சிகள் ஒருவருட காலத்தையும், ஏனைய பயிற்சிகள் ஆறுமாத காலத்தையும் கொண்டதாகும். தொழிற்பயிற்சியின் முடிவில் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளதுடன் வெளிமாவட்ட மாணவர்களுக்கு தங்குமிட வசதியும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளது.

இந்தத் தொழில் கற்கைநெறிகளுக்கு விண்ணப்பிக்க ஆர்வமுடையோர் - தமது பெயர், முழுப்பெயர், நிரந்தர முகவரி, பிறந்த திகதி, பால், பிரதேச செயலர் பிரிவு, கல்வித் தகைமை என்பவற்றைக் குறிப்பிட்டு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன்பாக பதிவாளர் தொழிற் பயிற்சி நிலையம், வடக்கு - கிழக்கு மாகாணம், உப்புவெளி, திருகோணமலை என்ற முகவரிக்கு அனுப்புதல்வேண்டும். மேலதிக விடயங்களை பிரதேச செயலகங்களில் பார்வையிடலாம். (90)



கொக்குவில் அமரர் சி.ஆறுமுகம்பிள்ளை நம்பிக்கை நிதிய அங்குரார்ப்பண நிகழ்வின்போது அமரரின் குடும்பத்தின் சார்பில் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை நம்பிக்கை நிதிய வைப்புப் பணமாக வழங்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்.

# கிழக்கில் தொண்டர் ஆசிரியர்களின் பிரச்சினைகளை தீர்க்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்——

கிழக்கிலங்கையில் தொண்டர் ஆசிரியர்கள் எதிர் நோக்குகின்ற பிரச்சினைக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அமைச்சர் பேரியல் அஷ்ரப் கல்வி அமைச்சரை சந்தித்து இது தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் அனேகமாக கரையோரப் பிரதேசத்திலுள்ள மாணவர்கள் சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ளமையால் கல்லூரி ஆவணங்கள், பாடசாலை தொண்டர் ஆசிரியர்களின் ஆவணங்கள் அழிந்து போயுள்ளன.

இதன் காரணமாக வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சால் தொண்டராசிரியர்களை நிரந்தரமாக்க நடத்திய நேர்முக பரீட்சையின் போது பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் உரிய ஆவணங்களை சமர்பிக்க முடியாமல் போயிருக்கிறது.

இவற்றை எல்லாம் அவதானத்துக்கு எடுத்துக் கொண்டு தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் பேரியல் அஷ்ரப், கல்வி அமைச்சரைக் கேட்டுள்ளார். கல்வி அமைச்சர் இதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்
அகவை ஒன்று



பெயர் : ஜெ.ஜெமில்
முகவரி : முள்ளியான்.

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் : ------
முகவரி : ------
பிறந்த ஆண்டு: ------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
------
பெற்றோர் ஒப்பம்

# யாழ். மாவட்டத்தில் இவ்வாண்டு இருபது குளங்கள் புனரமைப்பு

இருபாலை——

2006 ஆம் ஆண்டில் 10 ஆயிரம் குளங்கள் என்னும் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் விவசாய மற்றும் நீர்ப்பாசன மகாவலி அபிவிருத்தி அமைச்சால் யாழ்.மாவட்டத்திலும் இருபது குளங்கள் புனரமைக்கப்படவுள்ளன.

கமநல சேவைத்திணைக்களத்தினர் இந்தக் குளங்களை தெரிவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். கமநல சேவைத்திணைக்களத்தினரால் இந்தத் தெரிவுகளின் போது யாழ்.மாவட்டத்திலுள்ள விவசாய சம்மேளனங்கள், விவசாய அமைப்புகள், விவசாயிகளின் கருத்துகளும் உள்வாங்கப்படவுள்ளது .

இதனால் விவசாய அமைப்புகளைச் சார்ந்தோர் தமது பிரதேசங்களில் விவசாய நட வடிக்கைகளுக்கு உதவக்கூடியது எனக்கருதும் குளங்களின் விபரங்களை எதிர்வரும் மாசி மாதம் 10 ஆம் திகதிக்கு முன்பாக கமநல சேவைத் திணைக்களத்தினருக்கு முன்மொழிய முடியமென கமநல சேவைத் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

அனைவரது கருத்துகளும் உள்வாங்கப்பட்டு ஆராயப்பட்டு புனரமைப்புக்கான குளங்கள் தெரிவு செய்யப்படுமெனவும் அடுத்த மாதம் 25 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் இந்தத் திட்டத்துக்கான வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும், ஆரம்ப விழா பிரதேச செயலக ரீதியாகவும் இடம்பெறுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (90)

# சாந்தைக் கிராமத்துக்கு மீண்டும் குடிநீர் விநியோகம்

சுதுமலை——

வலிகாமம் தென்மேற்கு மானிப்பாய்ப் பிரதேச சபையால் மீண்டும் சாந்தைக் கிராம மக்களுக்கு குடிநீர் வழங்கப்படவுள்ளதாக பிரதேச சபை உள்ளூராட்சி உதவியாளர் செ.ரமேஸ் தெரிவித்தார்.

சாந்தைக் கிராம மக்களின் ஒத்துழைப்புடன் குடிநீர் விநியோகம் இடம் பெறவுள்ளது. நாளாந்தம் ஒரு குடும்பத்திடமிருந்து முப்பது ரூபா பெற்றே குடிநீர் விநியோகம் இடம் பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பண்டத்தரிப்பிலிருந்து குடிநீரை பவுசர் மூலமாகவே சாந்தைக் கிராமத்துக்கு விநியோகிப்பதால் தமக்கு அதிகளவான செலவு ஏற்படுவதனாலேயே தாம் இந்தக் கட்டணத்தை அறவிடுவதாகவும், இந்தக் கட்டண அறவீடு கிராம மக்களின் ஒத்துழைப்புடனேயே மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

பிரதேச சபை தமக்கான குடிநீர் விநியோகத்தை மீண்டும் ஆரம்பித்தமையானது தமக்கு பெரும் உதவியாகவுள்ளதுடன் தாம் குடிநீரைப் பெறுவதற்கு நாளாந்தம் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வந்ததாகவும், தெரிவித்த கிராம மக்கள் இந்த குடிநீர் விநியோகத்தால் சிரமங்களைத் தவிர்த்துக்கொள்ள முடியுமெனவும் தெரிவித்தனர். (91)

## நகர அபிவிருத்திச் சபையின்கீழ் மானிப்பாய் பிரதேச சபை

சுதுமலை——

வலிகாமம் தென் மேற்கு மானிப்பாய் பிரதேச சபையை நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் கொள்ளப்பட்டு வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதேச சபையை நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் கொண்டுவர வேண்டுமெனத் தெரிவித்து பிரதேசசபை செயலாளர் எம்.சாந்தசீலன் மகஜர் ஒன்றை கொழும்புக்கு அனுப்பிவைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரதேச சபையின் கீழ் உள்ள 28 கிராம அலுவலர் பிரிவுகளையம் நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ்க் கொண்டுவந்து பிரதேச அபிவிருத்தியை மேலும் விரிவுபடுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பிரதேச சபை உள்ளூராட்சி உதவியாளர் செ.ரமேஸ் தெரிவித்தார். (91)

## தென்னங்கன்றுகள் வழங்க ஏற்பாடு

இருபாலை——

2005 ஆம் ஆண்டு பெரும்போக வீட்டுத்தோட்ட மானியத்தின் கீழ் தென்னை அபிவிருத்திச் சபையினரால் கோப்பாய் பிரதேச செயலகத்துக்குட்பட்ட மக்களுக்கு விநியோகிப்பதற்காக தென்னங்கன்றுகள் பிரதேச செயலகத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.


இவை எதிர்வரும் புதன்கிழமை கிராம அலுவலரிடம் கையளிக்கப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தில் வீட்டுக்கு மூன்று தென்னங்கன்றுகள் என கூறப்பட்டபோதும் கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு ஐந்நூறு தென்னங்கன்றுகளே ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (90)




ஜோசப் கிருஸ்ணாவின்

# இவர்கள் தீர்க்கதரிசிகள் அல்ல


கிரேம் ஸ்மித் – சாத்திரம் பார்க்கவா முடியும்

அண்மையில் சர்வதேச ஒருநாள் போட்டிகளில் SUPER SUB முறை அறிமுகப்படுத்தப்பட்டது. சிலவேளைகளில் SUPER SUB பெயரிடும் சந்தர்ப்பம் அணித்தலைவர்களுக்குப் 'பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்கு பிடித்த கதையாகப் போய்விடுவது' உண்மை போலத் தெரிகிறது. இதற்கான இரண்டு நல்ல உதாரணங்கள் - இரண்டுமே தற்போது அவுஸ்ரேலியாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் VB தொடர் முதல் இரண்டு ஆட்டங்களில் நடைபெற்றுள்ளன. பொதுவான ஒரு எண்ணப்படி முதல் TOSS ல் ஜெயிக்கும் அணிக்கு SUPER SUB முறை சாதகமாக அமையவேண்டும். இலங்கை அணியின் தலைவர் SUPER SUB ஆக மைக்கல் வன்டோட்டை நியமித்துக்கொண்டார் . துடுப்பாட்ட வீரர் இவர். TOSS இல் ஜெயித்தவர். ஒரு சிறந்த துடுப்பாட்ட வீரர் இருக்கும் துணிவில் அவுஸ்ரேலியாவை துடுப்பெடுத்தாட அழைத்தார். . அதாவது இரண்டாவதாகத் துடுப்பெடுத்தாடி முதலில் துடுப்பெடுத்தாடுபவரின் எண்ணிக்கையைத் துரத்திப் பிடிக்கலாம் என்ற நம்பிக்கையே. ஆனால் யதார்த்தம் வித்தியாசமானதாக இருந்தது. TELSTRA DOME மைதானம் துடுப்பாட்ட வீரர்களுக்குச் சாதகமானது. அதேவேளை இரண்டாவதாகத் துடுப்பெடுத்தாடும் போது புதிய சூழ்நிலை, இரவுநேர விளக்கு வெளிச்சம், பனிப்பொழிவு ஆகியவை இலங்கை அணியை எதிர்பாராத சிக்கலுக்கு உட்படுத்திவிட்டது. எனவே ஒரு துடுப்பாட்ட வீரரை SUPER SUB ஆக உள்வாங்கியும் கூட இலங்கை அணிக்கு அதனால் எந்தப் பயனும் கிடைக்கவில்லை. இதேவேளை முதலில் இலங்கை அணி துடுப்பெடுத்தாடி இருந்தாலும் வன்டோட்டை களமிறக்கியிருக்காது. ஏனெனில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடும் அவுஸ்ரேலியாவை வீழ்த்த வன்டெட் உதவமாட்டார். இதனால் ஒரு பந்து வீச்சாளரை இழக்க அத்தப்பத்து விரும்பியிருக்க முடியாது.


மாவன் அத்தப்பத்து - சோதிடமா பார்ப்பது


இதே போன்றதொரு நிலை இலங்கை தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான ஆட்டத்திலும் ஏற்பட்டது. சிறந்த துடுப்பாட்ட வீரரான ஜக்கஸ் ருடொல்பை SUPER SUB ஆக உள்வாங்கிய ஸ்மித் முதலில் களத்தடுப்பில் ஈடுபடுத்த தீர்மானித்தார். இதற்குக் காரணம் இலங்கை ஏற்படுத்தும் இலக்கை அடைய இவரது சேவையும் அவசியம் என்பதாலாகும். ஆனால் இதே GABBA மைதானத்திலேயே இரண்டு நாட்களுக்கு முன்னர் ஒரு ஆட்டம் நடைபெற்றிருந்தது. அந்த வகையில் ஒரு டெஸ்ட் களத்தின் (PITCH) 3ஆவது அல்லது 4ஆவது நாள் தன்மையையே இந்தத் தடம் கொண்டிருந்தது. TOSS ஜெயித்தபோதும் முதலில் துடுப்பெடுத்தாட வாய்ப்பாக இருந்த களத்தைப் பயன்படுத்தாமல், TOSS இரண்டாவதாக துடுப்பெடுத்தாட முடிவு செய்தது துடுப்பாட்டப்பலத்தை நம்பியேயாகும்.

ஆனால் சிறந்த சுழற்பந்து வீச்சாளர்களைக் கொண்டிருந்த இலங்கை அணி தென்னாபிரிக்காவைச் சுருட்டி விட்டது. எனவே SUPER SUB விதி எந்த வகையில் நன்மை பயக்கும் என்று ஆராய்வதை விட, ஒரு அணியின் விதியையே எதிர்பாராமல் மாற்றிவிடுவதையே காண முடிகிறது. இந்த நிலையில் அணித் தலைவர்கள் என்ன முடிவு எடுப்பதென்று தெரியாமல் தவிக்கிறார்கள். முதலில் TOSS ஜெயித்தால் அது வாய்ப்பு என்பது பொது விதி. இப்போது என்னடாவென்றால், அதுவே "விதி"யாகி விட்டது. பாவம் அணித்தலைவர்கள்.

ம க் ட லி ன்

# சங்கடத்தில் இது ஒரு வகை

அவுஸ்ரேலிய கிரிக்கெட் பற்றிப் பேசும் போது பல்வேறு விடயங் களுடன் இன்னும் இரண்டு விடயங்களையும் பற்றிப் பேசுவார் கள். அதாவது உலகின் முதல் தரவரிசையில் இருக்கும் அவுஸ் ரேலிய அணி இன்னொரு தேசிய அணிக்கான வீரர் வரிசை ஒன்றையும் கொண்டிருக்கிறது. அந்த வகையில் அவுஸ்ரேலி யாவின் அந்த இரண்டாவது அணி உலகத்தர வரிசையில் இரண்டாவது இடத்தையும் பெற்றுக்கொள்ளும் என்பது ஒன்று. மற்றது ஏறத்தாழ 28 வயதுக்குப் பின்னரே பல ஜாம்பவான்கள் அவுஸ்ரேலிய அணியில் அறிமுகமாகிறார்கள் என்பது மற்றொன்று.


பிலிப் ஜக்கஸ் – தென்றலாய் நுழைகிறான்

எதுஎவ்வாறாயினும் தென்னாபிரிக்க, இலங்கை, அவுஸ்ரேலிய, முத்தரப்பு VB தொடரில் பல மாற்றங்களைச் செய்து அவுஸ்ரேலியா ஆடிக்கொண்டிருக்கிறது. இந்த வகையில் ஆரம் பத்துடுப்பாட்ட வீரர் பிலிப் ஜக்கஸ் ஒரு புதிய உதயம். முதல் அறிமுகத்திலேயே 94 ஓட்டங்கள் குவித்து தென்னாபிரிக்கா தோற்கக் காரணமாக அமைந்தவர். அவுஸ்ரேலிய வீரர் ஒருவர் தனது முதல் ஆட்டத்தில் ஒரு நாள் போட்டியொன்றில் பெற்ற அதிகூடிய ஓட்டமாகவும் 94 அமைகிறது.

இதேவேளை பிரெட் லீ இப்போது தான் புதுமுகம் போலத் தோன்றி, ஒருநாள் போட்டி களில் தன் இடத்தைத் தக்கவைத்துக் கொண்டுள்ளார். இவரது தென்னாபிரிக்காவுக்கு எதிரான 22 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகள் இவரது இடத்தை நிலைப்படுத்தியுள்ளது எனலாம். இதேபோல பிரெட்ஹொக் 32 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுக்களைச் சரித்தது, இவரை 2007 உலகக் கிண்ணப்போட்டி வரை கொண்டு செல்லும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.


மைக்கல் ஹஸி – இளந்தென்றல்


இன்னொருவர் மைக்கல் ஹஸி, இவரது ஒருநாள் துடுப்பாட்டச் சராசரி 121இற்கு மேல். இவர் நாட்டைப் பிரதி நிதித்துவப்படுத்திய சந்தர்ப்பங்கள் 24 மட்டுமே.

இப்பொழுது மைக்கல் கெட்டிச் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக ஓரிடத்தைப் பிடித்திருந்தாலும், அவுஸ்ரேலியத் தெரிவாளர்களுக்கு ஒரு சங்கடம். அடம் கில்கிறிஸ்ட ஒருபுறம் நின்றால் மறுபுறத்தில் கெட்டிச்சா? அல்லது பிலிப் ஜக்கஸா? றிக்கி பொண்டிங் பொறுத்த வரையில் சங்கடம் தான்.

மீண்டும் ஹொக் பற்றிப் பேசினால், ஷேன் வோன் ஒரு நாள் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்ற பின் இவரே அந்த இடத்தை நிரப்பினார். இவரது வயது 34. மறுபுறம் அவுஸ்ரேலியாவின் முதல் தரப்பந்து வீச்சாளர் கிளென் மக்ரா. ஆனால் றிக்கி பொண்டிங் இப்போது கூடுதலாக பிரெட்லீ யின் திறமை பற்றியே பேசி வருகின்றார். இப்படியாக பழைய பிரபலங்கள், புதிய நட்சத்திரங்கள் என்று அவுஸ்ரேலியாவில் கிரிக்கெட் வளம் நிறைந்து கிடக்கிறது. இது இப்பொழுது அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணித் தெரி வாளர்களுக்கும், பயிற்றுனருக்கும், அணித்தலைவருக்கும் பெரும் பிரச்சினையாகிவிட்டதாக பேசப்படுகின்றது. அதாவது யாரை விலத்துவது என்பதே அந்த பிரச்சினை. யாரை உள்வாங்குவது என்று பல்வேறு கிரிக்கெட் அணிகள் அங்கலாய்த்துக் கொண் டிருக்க, அவுஸ்ரேலியா யாரை விடுவிப்பது என்று தீர்மானிக்க முடியாமல் திணறிக்கொண்டிருக்கிறது.

ஜெயராட்டின்

# தரை இறங்கும் விமானம்


சுசந்திகா ஜயசிங்க – ஏணி சறுக்கியது நிஜம்

சுசந்திகா ஜயசிங்க இலங்கைக்கான ஒலிம்பிக் பதக்கம் பெற்றுக் கொடுத்த தாரகை. ஆனால் காலப் போக்கில் புறக்காரணங்களாலோ அல்லது அவரது செயற்பாடுகள் காரணமாகவோ என்னவோ தடகள மைதானத்தில் இருந்து ஒதுங்கியிருந்தார் அல்லது ஒதுக்கப்பட்டார். இன்னொரு புறம் அவரை நேசித்த லட்சக்கணக்கான ரசிகர்கள் மத்தியில் இருந்தும் அந்நியப்பட்டார்.

இப்போது பொதுநலவாய விளையாட்டுக்கள் அண்மிக்கும் வேளையில் சுசந்திகா மீண்டும் பேசுகிறார். ஆனால் அவரது வார்த்தைகள் சோகமாக ஒலிக்கின்றன. அதாவது கொமன்வெல்த் போட்டிகளில் சுசந்திகா கலந்துகொள்வதைத் தடுத்து, ஓரங்கட்டுவதற்கான முயற்சிகள் நடைபெறுவதாக ஆதங்கம் தெரிவித்துள்ளார்.

மறுபுறம் தடகள நிர்வாகிகள் கருத்துக் கூறும் போது- ஆறு வருடங்களுக்கு முன் ஒலிம்பிக் பதக்கம் வென்றார் என்பதற்காக இப்போது அவர் தெரிவு செய்யப்பட்டுவிட முடியாது. இன்று தனது தகுதியை மைதானத்தில் அவர் நிரூபிக்க வேண்டும். அதன் மூலமே தெரிவை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று காட்டமாகக் கருத்துக் கூறி இருக்கிறார்கள்.

சுசந்திகாவோ- என்னை உபாதைகளின் காரணத்தைக் காட்டி, நான் தகுதியற்றவள் என்ற பட்டியலில் சேர்க்கவே இவர்கள் பாடுபடுகிறார்கள். கடந்த வருடம் கால் உபாதையொன்றால் போட்டிகளில் கலந்து கொள்ள முடியாமல் போனது உண்மைதான்.

ஆனால் இப்போது பரிபூரண திடகாத்திரத்துடன் இருக்கிறேன் என்கிறார். சுசந்திகா கூறுவதைப் பார்த்தால், உரிய முறையில் தெரிவுப் போட்டிகளில் பங்குபற்றி, தனது இடத்தைப் பெற்றுக்கொள்ளாமல் நிச்சயமான ஒரு இடம் அவருக்கு உண்டு என்று எடுத்துக்கொண்டு அணியில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்று எதிர்பார்ப்பது போலத்தெரிகிறது.

இதற்கு பதிலடியாக நிர்வாகிகள் பின்வருமாறு கூறுகிறார்கள்- தேசிய மட்டத் தெரிவுகள் பெப்ரவரி மாதம் 11ஆம், 12ஆம் திகதிகளில் நடைபெறவிருக்கின்றன. அவருக்கு கொமன்வெல்த் போட்டிகளில் கலந்து கொள்ள உண்மையான அக்கறை இருந்தால், அங்கு வந்து தன் இடத்தைப் பெற்றுக் கொள்ளட்டும் என்கிறார்கள்.

இதில் வேடிக்கையென்னவென்றால்- தனது அதி உச்சத் திறமையை இப்போது காட்டவேண்டாம் என்று தனது அமெரிக்கப் பயிற்றுனர் கூறியுள்ளதாக சுசந்திகா கூறியிருக்கிறார். இப்படியும் ஒரு பயிற்சி முறை இருக்கிறதா? என்று ஆச்சரியப் படுகிறார்கள் தடகள அமைப்பைச் சார்ந்த அதிகாரிகள்.

எது எவ்வாறாயினும் சுசந்திகா 2006 மார்ச் மாதம் மெல்பேர்ண் போவாரா? இலங்கைக்கு ஒரு தங்கப் பதக்கம் வெல்வாரா? பொறுத்திருந்து பார்ப்போம்.

நிர்மலனின்

# காழ்ப்பா? ஆதங்கமா?


ஜக்மோகன் டால்மியா - கேட்கவும் வைப்போம்

சர்வதேச கிரிக்கெட் நிர்வாகம் தொடர்பில் மேலாதிக்கம் பெறுபவர்கள் வெள்ளை இனத்தவர்கள், வெள்ளை இன அணிகள் என்ற கருத்து நீண்ட காலமாகவே இருப்பதும், அதில் நிறையவே உண்மைகள் இருப்பதும் ரகசியமல்ல. இப்பொழுது புதுவிதமாக இன்னொரு ஆதிக்கம் பற்றிப் பேச்சு எழுந்துள்ளது. இதனைப் பற்றி பேசுபவர் மைக்கல் அத்தர்டன்.

அதாவது 2006 சம்பியன் கிண்ணப் போட்டிகளின் பின் மேற்படி சுற்றுப்போட்டியில் தான் கலந்து கொள்ளமாட்டேன் என்று இந்தியா கருத்து வெளியிட்டதைத் தொடர்ந்து இந்தியா கிரிக்கெட் உலகின் SUPER POWER ஆகிவிட்டதாகவும், இந்தியா சொல்வதற்கெல்லாம் ICC ஆமாம் சாமி போடுவதாகவும் பொரிந்து தள்ளியிருக்கிறார். இதற்கான காரணங்களைப் பின்வருமாறு வரிசைப்படுத்துகிறார் அவர்.

ICC சம்பியன் ஷிப்போட்டிகளில் கலந்துகொள்ள மறுத்தமை அவுஸ்ரேலிய அணியுடன் 2007, 2009ல் விளையாடப் போவதாகத் தீர்மானித்திருப்பது, நான்கு வருடத்துக்கு ஒருமுறை இங்கிலாந்துடன் தொடர்களில் ஈடுபடுவது என்று இந்தியா அறிவித்த போது- மற்றெந்த டெஸ்ட் விளையாடும் நாடும் இதுபற்றி மூச்சுக் கூடவிடவில்லை என்று கூறுகிறார் அவர். ICC ஏற்கனவே எல்லா நாடுகளையும் இணைத்துத் தயார்படுத்தி வைத்திருக்கும் அட்டவணைகள் இதனால் பாதிக்கப்படும் என்று தெரிந்தும் கூட யாரும் எதுவும் பேசவில்லை. இதன் காரணமாக ஒரு சில நாடுகள் – இந்தியா– நன்மைபெறும் தன்மைக்கு மாறாக ICC யால் எதுவுமே செய்ய இயலவில்லை என்ற கருத்து வெளிப்படுகின்றது.


மல்கம் ஸ்பீட் – கேட்டால் குறைந்துபோய்விடுமா?

1990களில் சர்வதேசக் கிரிக்கெட் வர்த்தக மயப்பட்ட போது, அதனால் கூடுதலான பலம் பெற்றவர்கள் இந்தியர்களே. இந்த நிலையில் உலகின் மிகப் பெரும் பணக்கார அங்கத்தவரான இந்தியாவுக்கு எதிராக யாரும் எதுவும் செய்ய முடியவில்லை. உலக கிரிக்கெட் வருமானத்தின் அறுபது சதவீதமான பெறுமானம் இந்தியாவின் ஊடாகவே பெறப்படுகிறது இதற்கு ஒரு எடுத் துக்காட்டு. இந்த வகையில் இங்கிலாந்துக்கான தொடர்களை இந்தியா யாசகம் செய்த காலம் போய், இந்தியா கேட்டதும் வா, வா என்று இருகரம் நீட்டி இங்கிலாந்து வரவேற்கும் நிலை வந்து விட்டது என்று கருதப்படுகின்றது. இதிலிருந்து இப்போது அரசோச்சுபவர் யார் என்று புரிந்து கொள்ளலாம். அண்மையில் வந்த இன்னொரு செய்தியின் படி இந்தியா உள்ளூர், சர்வதேச கிரிக்கெட் போட்டிகளை தமது சொந்த ஒளிபரப்பு நிலையங்களை அமைத்து ஒளிபரப்பப் போவதாக கூறியுள்ளார்கள்.

முன்பு ஜக்மோகன் டால்மியா இந்தியக் கிரிக்கெட் சபையின் தலைவராக இருந்த போது, இந்தியாவின் நலன்கள் சார்ந்த விடயங்களை நிறைவேற்றி, ஏனைய கிரிக்கெட் நாடுகளுக்கு அச்சம் தருபவராக இருந்தார். இன்றோ சரத்பவார் ஈதன்வழி தனிவழிடு என்று இந்தியக் கிரிக்கெட்டை தனித்தொரு அலகாக்கி, எல்லோரையும் குப்புற விழுத்தப் போகிறார் என்று அச்சப்படுகிறார்கள்.

# லிவிங்ஸ்ரனின் பீனிக்ஸ் பறவைகள்



செரினா வில்லியம்ஸ் – தரையிறங்கும் எண்ணமில்லை


செரினா வில்லியம்ஸ், வீனஸ் வில்லியம்ஸ் இருவரும் அவுஸ்ரேலிய ஓபன்ரெனிஸ் போட்டிகளில் ஒன்றும் சாதிக்க முடியவில்லை என்பது உண்மை. ஆனால், இவர்கள் ரெனிஸ் உலகின் பெரும் சக்திகள் என்பது இல்லாமல் போய்விடுமா என்ன என்று கேட்கிறார்கள் இரண்டு வீராங்கனைகள். இருவருமே லேசுப்பட்டவர்கள் அல்ல. ஒருவர் சில கால இடைவெளியின் பின் தானாகவே மீண்டும் மலர்ந்த குறிஞ்சிப் பூ மார்டீனா ஹிங்கிஸ். மற்றவர் பிரான்ஸ் நாட்டின் லில்லி மலர் தரம் 3ஐ கொண்டிருக்கும் அமலி மொரிஸ்மோ.

இம்முறை அவுஸ்ரேலிய ஓபன் ரெனிஸ் போட்டிகளின் மூன்றாம் சுற்றில்- 2005 ஆம் ஆண்டின் இதே கிண்ணத்தைச் சுவீகரித்த செரினா வெளியேறினார். அதேவேளை அவ்வளவு பரிச்சயமல்லாத பல்கேரிய வீராங்கனையுடனான போட்டியில் வீனஸ் தோல்வியுற்று வெளியேறினார். இவர்கள் இருவருமே முன்னதாக எமது பயங்கர எதிரிகள் மைதானத்தில். இரு வருமே மீண்டெழும் சக்தி வாய்ந்தவர்கள்.

இன்னொரு GRAND SLAM இவர்களுக்கு வாய்க்குமோ என்று எல்லோரும் சந்தேகப்பட்டார்கள். ஆனால் கடந்த விம்பிள்டன் GRAND SLAM போட்டியில் வீனஸ் கிண்ணம் வென்ற போது எல்லோருமே வாயடைத்துப் போனார்கள்.


இதே போலத்தான் செரினாவும் கடந்த வருடம் அற்புத மாக தன் வீச்சைக்காட்டி, அவுஸ்ரேலிய ஓபன் கிண்ணத்தை வென்றவர் அவர். இவர்கள் மனம் வைத்தால் செய்ய முடியாதது எதுவும் இல்லை என்று மார்டீனா ஹங்கிஸ் இவர்களைப் புகழ -அமெலி மொறிஸ்மோ தொடர்ந்து கூறுகிறார். இவ்விரு சகோதரிகளும் கடந்த வருடம் காட்டிய GRAND SLAM வெற்றிகள் இவர்கள் புறந்தள் ளப்பட முடியாதவர்கள் என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. கடந்த வருடம் எல்லோருமே, இவர்கள் தயாராக இல்லை. எல்லாம் முடிந்துவிட்டது. இனி இவர் களால் முடியாது என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே எல்லாவற்றையும் பொய்யாக்கியவர்கள் இவர்கள்.

இப்படியாக இளவரசிகளை இளவரசிகள் பாராட் டிக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பாராட்டு மிகையா னதல்ல. யதார்த்தமானது. இது முன்னரே நிரூபிக்கப் பட்டதொன்று. இன்னும் மூன்று GRAND SLAM கள் இந்த வருடத்தில் காத்திருக்கும் வேளையில் - அமெரிக்க வீராங்கனைகள் ஆச்சரியங்களை நிகழ்த்துவார்கள் என்ப தில் சந்தேகமில்லை. அவர்களது வெற்றிகளை வில்லியம்ஸ் சகோதரிகளின் ரசிகர்கள் வெகுவாக எதிர்பார்க்கிறார்கள்.



வீனஸ் வில்லியம்ஸ் – எங்கே வானத்தின் எல்லை?

# விமலனின் வெள்ளமாய் பெருகிய ஓட்டங்கள்



வீரேந்தர் ஷேவாக் – சந்தேகமென்ன, அதுவேதான்!

பலத்த எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் ஆரம்பமான இந்திய - பாகிஸ்தான் தொடரின் முதல் இரண்டு டெஸ்ட் போட்டிகளும் சமநிலையில் முடிவடைந்திருப்பது ரசிகர்களை விசனமடையச் செய்துள்ளது.

லாகூரில் நடந்த முதல் டெஸ்ட் போட்டியில் மழை யால் ஆட்டம் பாதிக்கப்பட்டது ஒரு காரணமென்றால் - ஆடுகளத்தை மோசமாக அமைத்தது இன்னொரு கார ணம். இந்த ஆடுகளம் முழுக்க முழுக்க துடுப்பாட்டக் காரர்களுக்கு மட்டுமே சாதகமாக அமைக்கப்பட்டிருந்த தால் லாகூர் போட்டி பரபரப்பில்லாமல் போயிருந்தது.

இதனால் கடுப்பான பாகிஸ்தான் கிரிக்கெட் சபை ஆடுகளம் மோசமாக அமைக்கப்பட்டதற்கு யார் காரணம் என்ற விசாரணையை நடத்த உத்தரவிட்டுள்ளது.

பொதுவாக சொந்தமண்ணில் விளையாடும் போது அந்நாட்டு கப்டனின் விருப்பத்துக்கு ஏற்றாற் போலவே ஆடுகளங்கள் அமைக்கப்படுவது வழக்கம். ஆடுகள அமைப்பாளர்களும் கப்டனின் யோசனையைக் கேட்ட பின்பே மைதானத்தை தயார் செய்வார்கள். இதனால் லாகூர் ஆடுகளம் மோசமாக அமைக்கப்பட்டதன் முழுப்பொறுப்பும் இன்சமாம் மீது சுமத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான குற்றச்சாட்டு ஒன்றைத்தான் அண்மையில் அவுஸ்ரேலிய முன்னாள் தலைவர் ஸ்ரீவ்வோ, கங்கூலி குறித்து கூறியிருந்தது ரசிகர்களுக்கு நினைவிருக்கலாம்.

பொதுவாக ஆசிய நாடுகள் சொந்த மண்ணிலேயே ஆதிக்கம் செலுத்துவதாகவும் அந்நியமண்ணில் அவர்களால் பிரகாசிக்க முடிவதில்லை என்றொரு குற்றச்சாட்டு எழுவதுண்டு. ஆனாலும் அந்த நிலைப்பாட்டில் உண்மைத்தன்மை இல்லையென புறந்தள்ளிவிட முடியாது.

ஆசிய நாட்டு ஆடுகளங்கள் பொதுவாக சுழற்பந்து வீச்சுக்குச் சாதகமானவை. ஆனால் தென்னாபிரிக்கா, அவுஸ்ரேலியா, இங்கிலாந்து, மேற்கிந்திய தீவுகள், நியூசிலாந்து போன்றவற்றிலுள்ள ஆடுகளங்கள் வேகப்பந்து வீச்சாளர்களுக்கு சாதகமானதோடு பந்து அளவுக்கதிகமான எகிறிவரும் தன்மைகளை கொண்டிருப்பவை. இதனால் தான் சுழற்பந்து வீச்சுக்குச் சாதகமான ஆடுகளங்களில் ஆடிப்பழகிய ஆசிய வீரர்கள், அந்நியநாட்டு மண்ணில் ஆடும்போது சிரமப் படுகிறார்கள். இதுவே ஆசிய நாடுகளை பொறுத்தவரை யில் அந்நிய மண்ணில் டெஸ்ட் வெற்றி என்பது 'குதிரைக் கொம்பாக' இருப்பதற்கு அடிப்படைக் காரணமா கிறது.

இவற்றை மனதிருத்தியே சில வெள்ளையின வீரர்கள் - ஆசியர்கள் வேகப்பந்து வீச்சுக்குச் சாதக மான ஆடுகளங்களை அமைத்து, அதில் பயிற்சியில் ஈடு பட்டாலே, எங்களுக்கு சமதையாக வரமுடியும் என அவ்வப்போது குரல் கொடுத்துள்ளார்கள்.

தங்களுக்கு சாதகமான மைதானங்கள் அமைக்கும் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான இன்சமாம், கங்கூலி போன்றவர்களைவிட, இந்த விடயத்தில் இந்திய அணித்தலைவர் ராகுல் டிராவிட் பல படிகள் மேலே நிற்பதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

சிறிது நாட்களுக்கு முன்னர் - ஆடுகளத்தை அமைத்துக் கொடுப்பது மைதானப் பொறுப்பாளர் களின் வேலை. அமைக்கப்பட்ட ஆடுகளத்தில் விளையாட வேண்டியதுதான் எங்கள் கடமை என்று அவர் கூறியிருந்தார்.

எனவே இவ்வாறானதொரு மன நிலையை ஏனைய ஆசிய நாட்டு தலைவர்களும் பின்பற்றி, தங்களைத் தயார்படுத்தும் பட்சத்தில் - உலகெங்கும் ஆசியாவின் கொடி பறக்கும் என்பதில் இரு கருத்தெழ வாய்ப்பில்லை.



சாஹிட் அப்ரிடி – ஒருநாள் ஞாபகம்.

அத்தோடு முன்னாள் தென்னாபிரிக்க வீரரும், தற்போதைய தொலைக்காட்சி வர்ணனையாளருமாகிய பெரி றிச்சட்ஸ் ஒருசமயம் - ஆசிய வீரர்கள் அனைவருமே 'செத்தகள வீரர்கள்' என்று கூறிய குற்றச்சாட்டுக்கும் அது சாட்டையடி கொடுப்பதாக அமையும்.

விளையாட்டு அரங்கம்



# மன்னார் திறந்தவெளி முகாமிலிருந்து 38 பேர் கிளிநொச்சிக்குத் திரும்பினர்!

மன்னார்

மன்னார் திறந்தவெளி அகதி முகாம்களில் வசித்து வந்த கிளிநொச்சியைச் சேர்ந்த 8 குடும்பங்களைச் சேர்ந்த 38பேர் நேற்று முன்தினம் கிளிநொச்சிக்கு மீளத் திரும்பியுள்ளனர். கடந்த 1990 ஆம் ஆண்டு யுத்த காலப்பகுதியில் இவர்கள் அனைவரும் மன்னார் திறந்தவெளி முகாமுக்குச் சென்றனர்.

இந்த முகாமில் 211 குடும்பங்களைச் சேர்ந்த 876 பேர் அகதிகளாகத் தங்கி இருந்தனர். இவர்களில் கிளிநொச்சியிலிருந்து இடம்பெயர்ந்த 153 குடும்பங்களைச் சேர்ந்த 630 பேரும், திருகோணமலை மற்றும் யாழ்ப்பாணத்தில் இருந்து இடம் பெயர்ந்து அகதிகளாக வந்தவர்களும் அடங்கியிருந்தனர்.

மன்னாரில் இராணுவத்தினரது வன்முறைகள் அதிகரித்துள்ள நிலையில் கிளிநொச்சியிலிருந்து இடம் பெயர்ந்து சென்றோரில் 38 பேர் மீளவும் கிளிநொச்சி திரும்பியுள்ளதாக மன்னார் பிரதேச செயலர் ஸ்டான்லி டிமெல் தெரிவித்தார்.

இராணுவத்தின் உயிலங்குளம் சோதனைச் சாவடியூடாக இவர்கள் நேற்று முன்தினம் கிளிநொச்சிக்கு பாதுகாப்பாக அனுப்பிவைக்கப்பட்டனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தக் குடும்பங்களுடன் மன்னார் பிரதேச செயலக அதிகாரிகள் இருவரும் சென்றிருந்தனர். கிளிநொச்சிக்குத் திரும்புவோர் தங்கள் இருப்பிடங்களுக்குச் செல்லும் வரை பாதுகாப்புக்கு உடன் அனுப்பிவைக்கப்படுவர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்



முல்லைத்தீவு சுவாமித் தோட்டத்தில் இயங்கிவரும் சென் சிடோர் ஆண்கள் சிறுவர் இல்லத்துக்கு கியூடெக் -கரித்தாஸ் நிறுவனத்தால் வழங்கப்பட்ட விளையாட்டு உபகரணங்களுடன் சிறுவர்களைப் படத்தில் காணலாம். (91)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான தையல் பயிற்சி நெறியின் நிறைவு விழா

வடமராட்சி

வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான தையல்பயிற்சி நெறியின் நிறைவுவிழாவில் சான்றிதழ், தையல் இயந்திரங்கள் வழங்கும் நிகழ்வும், கண்காட்சியும் நேற்று முற்பகல் 10.00 மணியளவில் இடம்பெற்றது.

தமிழர் புனர்வாழ்வுக்கழக நிதியுதவியுடன் கிராமிய புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தால் நடாத்தப்பட்ட இந்த நிகழ்வு - ஊரக மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் அ.முத்துராசா தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் - மங்கள விளக்கேற்றல், தேசியக்கொடி, தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கொடி என்பன ஏற்றலுடன் ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து வரவேற்புரையும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் ஆசியுரையை கட்டைக்காடு பாடசாலை முன்னாள் அதிபர் தாவீதுப்பிள்ளை அருளானந்தம் நிகழ்த்தினார். சிறப்புரையை வடமராட்சி கிழக்கு சுனாமித் திட்ட இணைப்பாளர் யூட்.கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக இணைப்பாளர் ராஜா, வடமராட்சி கிழக்குத் தமிழர் புனர்வாழ்வுக் கழக இணைப்பாளர் ஞானம் ஆகியோர் நிகழ்த்தினர். இதனைத் தொடர்ந்து பயிற்சி பெற்ற 50 மாணவர்களுக்கு ராஜன், யூட் உட்பட பலரும் சான்றிதழ்களை வழங்கி கௌரவித்ததோடு தையல் இயந்திரங்களையும், வழங்கினர்.

சுனாமியால் பாதிக்கப்பட்டு தொழில் வாய்ப்பின்றி வாழ்ந்த மக்கள் மத்தியில் குறிப்பாக பெண்களுக்கு இந்த நிகழ்வுத்திட்டம் மிக அத்தியாவசியமானதும், மிகுந்த பயன்பாடுடையதென்பதும், குறிப்பிடத்தக்கது.

# தமிழீழ சுகாதார சேவையினரால் உணவு நிலையங்கள் சோதனை

வவுனியா

வவுனியா வடக்கு பகுதியில் தமிழீழ சுகாதார சேவையினரால் உணவு சுற்றாடற் சுகாதாரச் செயற்பாடுகள் குறித்த திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

வவுனியா வடக்கு பகுதிகளான கனகராயன்குளம், புளியங்குளம், பனிக்கன்நீராவி, பெரியமடு ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள உணவு கையாளும் நிலையங்களில், சுற்றாடல் செயற்பாடு நிலையங்களிலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு உணவு, சுகாதாரத்துக்கு தீங்கு விளைவிக்கத்தக்க நிலையில் காணப்பட்ட இரண்டு உணவு நிலையங்கள் மூடப்பட்டன.

அத்துடன், உணவுப் பாதிப்புடன் காணப்பட்ட நிலையங்களுக்கு அடையாளக் குற்றப்பணம் அறவிடப்பட்டதுடன், அனைத்து நிலையங்களுக்கும் ஆலோசனையும் திருத்தங்களும் முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அபிவிருத்தித்திட்டமிடல் குழுத் தலைவராக ரிச்சாட்

மன்னார்

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு நிர்வாக மாவட்டங்களைக் கொண்ட வன்னி தேர்தல் மாவட் டத்தின் அபிவிருத்தித் திட்டமிடல் குழுவின் தலைவராக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மீள்குடியேற்றத்துக்கான அமைச்சருமான அப்துல் ரிச்சாட் பதியுதீன் - ஜனாதிபதியால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

# வாரத்தில் ஐந்து நாட்களில் கிளிநொச்சியில் தற்காப்பு பயிற்சி

கிளிநொச்சி

கிளிநொச்சி நகரில் இடம்பெற்று வரும் தற்காப்பு பயிற்சி வாரத்தில் சனி, ஞாயிறு தவிர்ந்த ஐந்து நாட்களும் இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தற்காப்புப் பயிற்சியில் கணிசமான அளவு அரச திணைக்கள, கூட்டுறவு ஊழியர்களும் மாலை வேளையில் பங்கு கொள்வது குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சி பொது மைதானத்தில் இடம் பெற்றுவரும் இந்த தற்காப்பு பயிற்சியில் இளைஞர், யுவதிகள், நடுத்தரவயதுடையோர் எனப் பலரும் கலந்து கொள்கின்றனர்.

இந்தக் கட்டுமானப் படைப்பயிற்சி குறித்து உள்நாட்டு, வெளிநாட்டு செய்தியாளர்கள் - புகைப்படங்கள் எடுத்தும், செய்தி சேகரித்தும் வருவதைக் காணமுடிகிறது.

நாம் எமது மண்ணை மீட்க, பாதுகாக்க இந்த பயிற்சியில் பங்கு கொண்டுள்ளோம். இன்றைய அரசு சமாதானத்தைப் புறம் தள்ளி வருகிறது. தமிழர்களைக் கொல்லும் நடவடிக்கைகளில் அரசபடைகள் தீவிரம் காட்டுகின்றன இதற்கு நாம் அனுமதிக்கப் போவதில்லை.

பயிற்சி நிறைவில் ஏனைய மாவட்ட மக்கள் படைக்கு எமது ஆதரவை தெரிவிப்போம். அரச படைகள் எம் மண்ணைவிட்டு வெளியேறட்டும் இவ்வாறு பயிற்சியை மேற்கொள்ளும் மக்கள் கருத்துத் தெரிவித்தனர்.


**எமது தாயக மண்ணில் நூறுவீதம் செய்முறைப் பயிற்சியுடன் எமது மாணவர்களும் கணனித்துறையில் பாரிய விற்பனர்கள் ஆக வேண்டுமென்ற கனவை நினைவாக்கும் நோக்குடன் சிறந்த செய்முறைப் பயிற்சிக்கூடத்துடன் அமைக்கப்பட்டுள்ளது.**

**நாங்கள் யார்?**

- இந்தியாவை தலைமையிடமாகக் கொண்டு செயற்படுபவர்கள்.
- இந்திய பொறியியல் துறையில் எலக்ட்ரோனிக்ஸ் அன்ட் கொமுனிக்கேசன் துறையில் சிறப்புப் பட்டம் பெற்றவர்கள்.
- 2 தசாப்த காலமாக இந்திய மற்றும் உலக முன்னணி நிறுவனங்களில் வேலைசெய்து அனுபவம் பெற்றவர்கள்.
- உலக முன்னணி நிறுவனங்களான IBM, Compaq, Dell, Bell Labs, Dlink, Link sys, Microtek, Cisco மற்றும் Gateway போன்ற நிறுவனங்களுடன் இணை Hardware & Network பொருட்கள் தயாரிப்பில் பாரிய பங்காற்றியவர்கள்.
- உலக முன்னணி நிறுவனங்களான Microsoft, Sun microsystems, Lotus Intl, AT& T Labs, SCO, Oracle மற்றும் Infosys நிறுவனங்களுடன் மென்பொருள் இணைத் தயாரிப்பில் ஈடுபட்டவர்கள்.
- கடந்த ஒரு வருடகாலமாக UNIT நிறுவனமூடாக கணனி உதிரிகள், வலைப் பின்னலமைப்பிற்கான உதிரிகள் மற்றும் அதற்குரிய சேவைகளையும் வழங்கிக் கொண்டிருப்பவர்கள்.

**கணனிக் கல்வியில் எமது முதல் கல்**

**HARDWARE**

→PC Components, Features, and System Design →Microprocessor Types and Specifications →Motherboards and Buses →BIOS & CMOS RAM →Memory Types and Cache Memory →The IDE, SCSI, SATA Interfaces →Magnetic HDD, FDD Storage Principles →Optical Storage →Video and Audio Hardware →Local Area Networking, Internet Builds-up and Tune ups →SMPS, Assembling & Evaluating a System →BIOS and CMOS Configuration, Setups and Fine Tunings →PC Diagnostics, Testing, and Maintenance →Operating System Installation, Configuration and Repairing →Dos Commands, Virus Scanners, Cleaner Installation and Operation →Trouble Shooting →Remote and Mobile Interfaces →Chip Level and Card Level Trouble Shooting →Mother Board repairing, Scope diagnostics, Chip Level Servicing →Software based Diagnostics system →Infrared, Blue Tooth Connectivity

**NETWORK**

Simplex, Duplex Types · The Ethernet System · The Media Access Control Protocol · Full-Duplex & Auto-Negotiation · Twisted-Pair, Fiber Optic, Fast Ethernet, Gigabit Ethernet Media System · Multi-Segment Configuration Guidelines · Structured Cabling · Ethernet Repeater, Switching, Router Hubs · Network OS Installation & Configuration (WinXP, Win2000 & Win98) · LAN, WAN & MAN fundamentals · Troubleshooting · Configuring the Interface, Routing, DNS & Network Servers · Send mail · Memory Buffers · Interface Layer · Interfaces: Ethernet, SLIP and Loop Back · IP Addressing · Domains and Protocols · Internet Protocol · Option Processing · Fragmentation and Reassembly · Internet Control Message Protocol · Multicasting · IGMP: Internet Group Management Protocol · IP Multicast Routing · Socket Layer, I/O & Options · Radix Tree Routing Tables · Routing Requests and Routing Messages · Routing Sockets · ARP, UDP & TCP · TCP Timers, Output, Functions, Input & User Requests · BPF, Raw IP · Trouble shooting TCP/IP · Network Security · Internet Information Resources · PPP Tools · Campus Network Design Models · Basic Switch and Port Configuration · VLANs and Trunking · Redundant Switch Links · Trunking with ATM LANE · Inter VLAN Routing · Multilayer Switching · Configuring Multicast Networks & Access in the Campus Environment · Monitoring and Troubleshooting · Scenarios for Final Preparation · Routing Principles · Extending IP Addresses · Configuring OSPF in a single Area · Interconnecting Multiple OSPF Area · Configuring EIGRP · Configuring Basic Border Gateway Protocol · Implementing BGP in Scalable Networks · Optimizing Routing Update Operation · Implementing Scalability Features in Internet work

Field Offices: UNIT, India. Aram Menporulagam, India. Zensoft, Malaysia. Zensoft, USA. WinCisco Labs, Canada.

பயிற்சிகள் பற்றிய விபரங்களுக்கு
தொடர்பு
நிர்வாகம்
UNIT Education
16/1, Killnar Lane,
Jaffna.
Near Jaffna Hindu College, Opp Lane to PandiKottu Pillayar Kovil, K.K.S. Road. Opp Lane to Velankanni Church, Kasthuriyar Road, Jaffna.

Free Course Material

100% JOB ASSISTANCE

Inauguration Offer
இன்று Admission எடுப்பவர்களுக்கு
50%
பயிற்சிக்கட்டண கழிவு வழங்கப்படும்

100% Field Training


# மின் கம்பங்கள் பறிக்கப்பட்டும் இதுவரை மின்சாரம் இல்லை


வட்டக்கச்சி

கிளிநொச்சயிலிருந்து வட்டக்கச்சி சந்தை வரையான பகுதிக்கு மின்கம்பங்கள் பறிக்கப்பட்டும் இதுவரையில் மின்சாரம் வழங்கப்படவில்லை.

இந்தப் பகுதியில் மின்கம்பங்கள் பறிக்கப்பட்டு, இருமாதங்களுக்குள் மின் கேபிள்கள் இணைக்கப்பட்டு மின்சாரம் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால், நான்கு மாதங்களுக்கு மேலாகியும் இதற்கான வேலைகள் இது வரையில் பூர்த்தியாக்கப்படவில்லை.

இந்தப் பகுதிக்கு 1990 ஆம் ஆண்டு மின்சாரம் வழங்கப்பட்டு, மக்கள் பூரணமாக பயனடைவதற்கு முன்னரே கிளிநொச்சி மாவட்டத்துக்கான மின்சாரம் தடைப்பட்டது. மீண்டும் எமக்கு மின்சாரம் வழங்கப்படுகின்றது என இந்தப் பகுதி மக்கள் சந்தோசத்தில் இருந்தனர். ஆனால் இது இப்போதாவது சாத்தியமாகுமா என்ற கேள்விக்குறியுடன் இந்தப் பகுதி மக்கள் இருக்கின்றனர்.

இது தொடர்பாகச் சம்பந்தப்பட்டவர்கள் கவனமெடுத்து இந்தப் பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்கு ஆவன செய்யுமாறு இந்தப் பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (90)



வடமராட்சி கிழக்கு தாளையடி கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பயனாளி ஒருவருக்கு கியூடெக் - கரித்தாஸ் நிறுவனத்தினால் வெளி இணைப்பு இயந்திரங்கள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் கியூடெக் கரிதாஸ் நிறுவனப் பிரதிநிதி பாலமோகன் பயனாளி ஒருவரிடம் இயந்திரத்தைக் கையளிப்பதைப் படத்தில் காணலாம். (91)

நமது ஈழநாடு

வைர வரிகள்

சிறப்புஈனும் செல்வம்பெறினும் பிறர்க்கு இன்னா
செய்யாமை மாசுஅற்றார் கோள்

- திருக்குறள் -

## நமது நோக்கு

# அரசை அழுத்துங்கள்!

இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் போர் நிறுத்த உடன்பாட்டை அமுலாக்கம் செய்வது தொடர்பாக ஜெனிவாவில் பேச்சுக்களை நடத்த இணக்கப்பாடு ஏற்படுத்தப்பட்டிருப்பதற்கு சர்வதேச நாடுகள் பெரிதும் வரவேற்புத் தெரிவித்துள்ளன.

ஐ.நா.செயலர் கொபி அனான், அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா, சுவிஸ், ஜப்பான் என்று தினமும் ஒவ்வொரு நாட்டிலிருந்து வரவேற்பு அறிக்கைகள் வெளிவ ந்து கொண்டிருக்கின்றன.

இலங்கைத்தீவில் சமாதானம் நிலவவேண்டுமென இத்தனை நாடுகள் கரிசனையுடன் இருப்பது மகிழ்ச்சிக்குரியதொன்றாக இருக்கிறது.

ஆனால், இந்த சர்வதேச நாடுகள் இலங்கையில் நீடித்த அமைதியும், மக்களுக்கு நிம்மதியான வாழ்வும் கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும். அண்மைக்காலமாக தமிழர் தாயகப் பகுதிகளில் அரசாங்கம் இராணுவ வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிட்டிருந்தபோது - சர்வதேச சமூகம் உரியவகையில் அழுத்தங்களைக் கொடுக்கவில்லை.

வன்முறைகள் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்று பொதுப்படையாகவும், படையினர் மீதான தாக்குதல்கள்தான் பொதுமக்கள் உயிரிழக்கக் காரணம் என்றும் கூறிவந்த அமெரிக்கா போன்ற நாடுகள், அரச பயங்கரவாதம் தமிழ்மக்கள் மீது ஏவிவிடப்பட்டபோது கண்டுகொள்ளாமல் தான் இருந்தன.

ஆனால், தமிழ்மக்கள் மீதான இராணுவ வன்முறைகளால் போர் நெருக்கடி தீவிரம் பெற்றபோது மட்டும் தமிழர் தரப்பு மீது நெருக்கடிகளைக் கொடுக்கும் விதத்தில் சில நாடுகள் நடந்துகொள்கின்றன.

இப்போது மீளவும் பேச்சுக்கான சூழல் உருவாகும் நிலை தென்படுகிறது. இந்தச் சூழலில்தான் பல்வேறு நாடுகள் இதை வரவேற்கும் விதத்திலான அறிக்கைகளை வெளியிட்டிருக்கின்றன.

பேச்சுக்களுக்கு இருதரப்பும் இணக்கம் கண்டிருப்பது முக்கியமான விடயம்தான் - 2003 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்துக்குப் பின்னர் இப்படிப்பட்டதொரு சூழல் இப் போதுதான் உருவாகியிருக்கிறது.

அந்தவகையில் வெளிநாடுகள் வரவேற்புத் தெரிவிப்பது ஒருபுறமிருக்க - இனிமேலும்கூட பேச்சுக்கான புறச்சூழலை உருவாக்குவதற்கு சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்கவேண்டும்.

அரச படைகளும், அதன் துணை ஆயுதக்குழுக்களும் தான் அண்மைக் காலத்தில் போர் நெருக்குவாரம் தீவிரமடைந்ததற்கு முழுக் காரணமாக இருந்தது என்பதை எவரும் மறுக்கமுடியாது.

இந்த நிலையில் அரச படைகளும், துணை ஆயுதக் குழுக்களும் தமது கெடுபிடிகள் மற்றும் வன்முறைகளை முழுமையாக நிறுத்திவிடாத சூழலே காணப்படுகிறது. இந்த நிலையில் ஜெனிவாவில் பேச்சுக்கள் நடக்குமா என்ற கேள்வி பலரிடம் இருக்கவே செய்கிறது.

ஏனெனில், ஜெனிவாவில் பேச்சுக்கள் நடப்பதற்கான இயல்பான சூழ்நிலை ஏற்படுத்தவேண்டியது அரசாங்கத்தின் முழுப்பொறுப்பாகும். சுமுகநிலை உருவாக்கப்படாமல் தாம் பேச்சுக்களில் பங்கேற்க முடியாதென புலிகள் தெரிவித்துள்ளனர்.

இதனால்தான், இப்போது அரசாங்கம் தனது முப்படைகள், பொலிஸ் ஆகியவற்றுடன் ஆயுதக் குழுக்களையும் அடக்கிவைக்கவேண்டியது அவசியமாகிறது.

ஜெனிவா பேச்சுக்கு இணக்கம் காணப்பட்ட நிலையில் கூட - யாழ். குடாநாடு அடங்கலான தமிழர் தாயகப் பகுதிகளில் இராணுவக் கெடுபிடிகள் ஓய்வுக்கு வரவில்லை.


இந்தநிலை தொடர்ந்து நீடிக்குமானால் அது ஆபத்தான விளைவுகளுக்கு வித்திடலாம். எனவே, சர்வதேச நாடுகள் இதையெல்லாம் கண்டுகொள்ளாமல், கண்ணை மூடிக்கொண்டிருக்காமல் அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

பேச்சுக்களுக்கு இணக்கம் தெரிவித்ததற்காக மகிழ்ச்சி தெரிவிப்பதை விட்டுவிட்டு - பேச்சுக்கள் தொடர்வதற்கான புறச்சூழலை உருவாக்க அரசுக்கு அழுத்தம் கொடுப்பதே சிறந்த வழியாகும்.

அதுதான் நிரந்தர சமாதானத்துக்கு வழிகோலும்.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

## நாடும் நடப்பும்




# ஒப்பந்தம் செய்யப்படும்போது உரியவர்கள் வரவேண்டும்!

## வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராஜா

வடமராட்சி

பாடசாலைகளின் அபிவிருத்தி கருதி, பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களால் மேற்கொள்ளப்படும் சகல அபிவிருத்தித் திட்ட நடவடிக்கைகளுக்கும் கல்வித் திணைக்களத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும்போது பாடசாலை அபிவிருத்திச் சங்கத் தலைவருடன் செயலாளரும் கைச்சாத்திட வேண்டும்.

எவ்வித காரணம் கொண்டும் ஒப்பந்தத்தில் பொருளாளர் கைச்சாத்திடக்கூடாதென வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராஜா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில் -

சில பாடசாலை அதிபர்கள் ஒப்பந்தங்கள் கைச்சாத்திட பொருளாளர்களை அழைத்து வருகின்றனர். இதனால் பெருமளவு சிரமங்கள் ஏற்படுவதோடு, அவர்களைத் திருப்பியனுப்ப வேண்டிய நிலையும் தோன்றுகின்றது. இவ்வாறான பொறுப்பற்ற செயல்களை அதிபர்கள் மேற்கொள்ளக் கூடாது.

இது தொடர்பாக வலயக் கல்விப் பணிப்பாளருக்கு முறையிட்டதை அடுத்தே வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் இந்த அறிவித்தலை விடுத்தார்.

அதிபரும், பொருளாளரும் மட்டும் ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுவது கல்வி அமைச்சின் செயற்பாட்டுக்கு சட்டவிரோதமானது. இதுபோன்ற நடவடிக்கைகளை கல்வித் திணைக்களம் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டாது. இவை ஒழுங்கீனங்களையும், ஊழல்களையும் ஏற்படுத்தும்.

ஒப்பந்தங்களை கைச்சாத்திட வரும்போது பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளருடன் வரவேண்டுமென கல்வித் திணைக்களம் பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளது. இதனை அதிபர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும்.

பாடசாலைக் கல்விச் சமூகத்தில் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களின் பணி இன்றியமையாததாகும். அவை பாடசாலையின் அபிவிருத்தியில் அதிக அக்கறை கொண்டு செயற்படவேண்டுமென கல்வியமைச்சு எதிர்பார்க்கிறது.

இதனாலேயே பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு பெற்றோரும், மூன்றில் ஒரு பங்கு ஆசிரியர்களும் உள்ளடக்கப்படவேண்டுமெனக் கல்வி அமைச்சு சுற்று நிருபம் மூலம் சகல அதிபர்களுக்கும் அறிவித்துள்ளது.

இன்று சுனாமி அனர்த்த அழிவுகளுக்குட்பட்ட பாடசாலைகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் பெருந்தொகையான நிதியுதவிகளை வழங்கி வருகின்றன. இந்த நிதியுதவிகள் உரிய முறையில் பயன்படுத்தப்பட்டு பாடசாலைகளின் தேவைகள் பூர்த்தியாக்கப்பட்டு மாணவர்களின் கல்வி மேம்பாடடைய பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் தத்தமது கடமைகளையும், பொறுப்புக்களையும், நன்குணர்ந்து ஒழுங்கான முறையில் சிறப்பாகச் செயற்படும்போதுதான் எமது எதிர்கால சந்ததியினரின் கல்வித் தரம் மேம்பாடடைந்து, நாட்டை சுபீட்சப் பாதைக்கு இட்டுச் செல்லும் எனவும் அவர் குறிப்பிட்டார். (12)

# படையினரின் அச்சுறுத்தலால் வேலிகள் இன்றிய வீடுகள்!

## அரியாலையில் மக்கள் பெரும் சிரமம்

அரியாலை

அரியாலை - தபால்கட்டைச் சந்தி இராணுவ முகாமுக்கு அண்மையிலுள்ள ஏ.வி. றோட், தபால்கட்டைச் சந்திப் பகுதி மற்றும் பொன்னம்பலம் வீதி சந்திக்கு இடைப்பட்ட கண்டி வீதி ஆகிய பகுதிகளில் வீதியின் இருமருங்கிலுமுள்ள வேலிகளை அகற்றுமாறு படையினர் அச்சுறுத்தியதை அடுத்து -

அச்சமடைந்த மக்கள் - தமது வீட்டு வேலிகளை அகற்றியுள்ளதால் வளவுகள் திறந்த நிலையில் காணப்படுகின்றன.

இதனால் பெண்கள் கிணற்றடியில் குளிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன் கால்நடைகள் வீடுகளுக்குள் சென்று பயிர்களை நாசம் செய்துவருகின்றன.

இதனால் மக்கள் தமது அன்றாட கருமங்களை ஆற்றமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன் பெண்கள் வீடுகளில் தனித்திருக்க முடியாத அச்சநிலை தோன்றியுள்ளது. (55)

# அரியாலையில் சிரமதானம்!

அரியாலை

அரியாலைப் பகுதியின் பல இடங்களிலும் கடந்த வியாழனன்று வீதிச் சிரமதானப் பணி இடம்பெற்றது.

யாழ்.மாநகரசபையின் அரியாலைப் பகுதி மேற்பார்வையாளர் யேசு அமிர்தநாதன் தலைமையில் யாழ்.மாநகரசபை ஊழியர்கள், பொது நிறுவனங்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்ட இந்த வீதிச் சிரமதானப் பணியில் - உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டு ஆரம்பப் பணிகளை தொடக்கி வைத்தனர். (55)

# குப்பைகளை அகற்றுவதில் சிரமம்

அரியாலை

வாழைக்குற்றிகளை வீதிகளில் கொட்டுவதால் யாழ். மாநகர சபையினர் குப்பைகளை உடனுக்குடன் அகற்றுவதில் சிரமப்படுவதாக யாழ்.மாநகர ஆணையாளர் தெரிவித்தார்.

யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பெருமளவு குப்பைகள் தேங்கிக் கிடக்கும் நிலையில் சிலர் வாழைக்குற்றிகளை வெட்டி வீடுகளில் புதைக்காமல் வீதிகளில் கொட்டிவிடுவதால் யாழ். மாநகர சபை பணியாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இவற்றை உணர்ந்து மக்கள் கழிவுப் பொருட்களை வீதிகளில் கண்டபடி கொட்டாது பொறுப்புடன் நடந்துகொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (55)

# மாதகல் இந்து மயானத்தை பயன்படுத்த படையினர் தடை!

அரியாலை

வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட குசுமன்துறைஇந்து மயானத்தைப் பயன்படுத்த முடியாதுள்ளதாக மாதகல் கிராம மக்கள் விசனம் தெரிவித்தனர்.

மாதகல் சென்.ஜோசப் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், மாதகல் விவசாயக் கூட்டுறவுச் சங்கம் ஆகியன இணைந்து மகஜர் ஒன்றை வலிகாமம் தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை செயலாளரிடம் கையளித்தன.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

எமது கிராம மக்களுக்கென அமைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டுவந்த மேற்படி இந்து மயானத்தைப் பயன்படுத்த இராணுவத்தினர் தடைவிதித்துள்ளனர்.

இந்தத் தடையை நீக்கி இந்த மயானத்தைப் பாவிப்பதற்கு நடவடிக்கை எடுத்து, எமக்கு ஏற்பட்டுள்ள மிக முக்கியமான தேவையை நிறைவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விவசாய கூட்டுறவுச் சங்கத் தலைவர் வி.சிற்றம்பலம், கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கத் தலைவர் எ.ம.அமலதாஸ் ஆகியோர் கிராம மக்கள் சார்பாக கையொப்பமிட்டு மேற்படி மகஜரை கையளித்தனர்.(55)

# இலவச பாடநூல் விநியோகத்தில் அரசு பின் நிற்பது ஏன்?

மாணவர்களதும், ஆசிரியர்களதும் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் இலவச பாடநூல்களுக்கு முக்கிய இடம் உண்டு என்பதை கல்வியறிவுள்ள எவராலும் மறுக்கமுடியாது. இலங்கையில் 1980 ஆம் ஆண்டு தொடக்கம் இலவச பாடநூல் விநியோகம் நடைபெற்று வருவது நாம் அனைவரும் அறிந்த விடயமே யாகும்.

ஆனால் இந்தப் பாடநூல்கள் அன்று தொடக்கம் இன்று வரை உரிய காலப்பகுதிகளில் மாணவர்களுக்குக் கிடைத்தாக வரலாறு இல்லை. இன்றும் அவ்வாறானதொரு நிலையே தொடர்ந்து செல்கிறது.

காலமாற்றங்களுக்கு ஏற்ப கல்வியிலும் பல மாற்றங்கள் கொண்டு வரப்படுவது வழமையானதொன்றேயாகும். இந்த மாற்றங்கள் புதிய கல்விச் சீர்திருத்தமாக கல்வி அதிகாரிகளால் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அவ்வாறானதொரு மாற்றம் கடந்த வருடம் தரம் 7 வகுப்பில் உள்ள மாணவர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. அவர்களுக்கு கணிதம், தமிழ், விஞ்ஞானமும் தொழிநுட்பவியலும், சமூக விஞ்ஞானமும் போன்ற பாடங்கள் புதியகல்வி பாடவிதானத்துக்கேற்ப கற்பிக்கப்பட்டது.

கடந்த வருடம் அந்த மாணவர்கள் அனுபவித்த இடர்பாடுகள் எண்ணிலடங்காதவை. ஏனெனில் புதிய கல்வி பாடவிதானத்துக்கு அமைவான இலவச பாடநூல்கள் உரிய காலப் பகுதிகளில் அந்த மாணவர்களுடைய கைகளில் கிடைக்கவில்லை. அதுமட்டுல்லாது, சில கல்வி வலயங்களிலுள்ள பாடசாலைகளுக்கு ஒரு சில பாடநூல்கள் கூட, கிடையாது கடந்த வருட கல்வியாண்டு முடிவடைந்ததும் இங்கு வேதனையோடு சுட்டிக்காட்டத்தக்கது.

சென்ற கல்வியாண்டில் பல்வேறு இடர்பாடுகளை எதிர்நோக்கிய தரம் 7 மாணவர்கள் இந்தப் புதிய கல்வியாண்டிலும் தரம் 8 இல் பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர். ஏனெனில் இதுவரை இவர்களுக்குரிய இலவச பாடநூல்கள் கல்வியமைச்சால் அனுப்பிவைக்கப்படவில்லை. இதேநிலை இவர்களுக்கு ஒவ்வொரு புதிய கல்வியாண்டிலும் தொடரப் போகிறதா?

இந்தப் புதிய பாடவிதானத்துக்கு அமைவான ஒரு சில பாடநூல்கள் ஒவ்வொரு கல்வி வலயங்களிலும் காணப்படுகிறது. அதனை ஆசிரியர்கள் நிழற்பிரதி எடுத்து வந்து கற்பித்து வருகிறார்கள். சில மாணவர்களும் அதனை நிழற்பிரதி எடுத்து கற்றலில் ஈடுபடுகிறார்கள். இது எந்தளவுக்கு சாத்தியமாகும்? எல்லா மாணவனாலும் நிழற்பிரதி எடுத்து கற்கமுடியுமா? எவ்வளவு பணம் செலவாகும்? எமது நாட்டில் இலவசக் கல்வி என்பது பெயரளவில் மட்டும் தானா என சிந்திக்க வேண்டிய விடயமாகியுள்ளது.

கல்வி அமைச்சானது புதிய கல்விச் சீர்திருத்தம் அமுல்படுத்தப்படாத சாதாரண வேளைகளில் கூட பாடசாலைகளுக்கு உரிய காலப்பகுதிகளில் பாடநூல்களை அனுப்பிவைப்பதில்லை. இதனால் ஒவ்வொரு வருடமும் பாடநூல் என்பது தட்டுப்பாடான பொருளாகவே மாறிவிடுகிறது. பழைய பாடநூல்களை மாணவர்களிடம் இருந்து மீளப்பெற்று புதிய கல்வியாண்டைத் தொடங்கும் மாணவர்களுக்கு கொடுப்பதிலும் பல்வேறு சிக்கல்கள் காணப்படுகின்றன.

ஆரம்ப வகுப்பறைகளில் காணப்படும் பெரும்பாலான மாணவர்கள் பாட நூல்களை முறைப்படி ஒழுங்காகப் பேணிப் பாதுகாப்பதில்லை. ஏனெனில் அவர்கள் சிறுபிள்ளைகள். போதிய முதிர்ச்சி அடையாதவர்கள். இவர்களது பாடநூல்களை கல்வியாண்டு முடிவடையும் போது, மீளப்பெற்று புதிய கல்வியாண்டைத் தொடங்கும் மாணவர்களுக்கு கையளிக்க முடியாமல் உள்ளது. அது மட்டுமல்லாது பெரும்பாலான பாடசாலைகளின் தரம் 9, 10,11 வகுப்புக்களிலுள்ள மாணவர்களின் இலவசப் பாடநூல்கள் க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையைக் காரணம் காட்டி அவர்களிடம் அப்படியே விடப்படுகிறது.

எனவே, பழைய பாட நூல்களை கூட மீளப்பெற்று, புதிய கல்வியாண்டைத் தொடங்கும் மாணவனுக்குக் கொடுப்பது பெருமளவில் நடைமுறைச் சாத்தியமன்று. எனவே, ஒவ்வொரு வருடமும் கட்டாயம் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட வேண்டிய அத்தியாவசிப் பொருட்களாக பாடநூல் மாறிவிடுகிறது. அதுவும் உரிய காலப் பகுதிகளில் அந்தப் பாடநூல்கள் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட வேண்டும். ஒவ்வொரு கல்வியாண்டும் முடிவடையும் இறுதித் தினத்தில் - புதிய கல்வியாண்டைத் தொடங்கும் மாணவனுக்கான பாடநூல்கள் அனைத்தும் அந்த மாணவனுடைய கைகளிலேயே கொடுக்கப்படவேண்டும். அப்போது தான் ஒரு மாணவன் புதிய வகுப்பின் சவால்களை எதிர் கொள்ளத் தயாராவான். எனவே, இது தொடர்பாக கல்வி அதிகாரிகள் இனியாவது கவனத்தைச் செலுத்த வேண்டும்.

அது மட்டுமல்லாமல் புதிய கல்விச் சீர்திருத்துக்கு அமைவாக கல்வி அமைச்சால் பல கணிப்பீட்டுக் கருவிகள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளன. அதில் ஒன்றுதான் திறந்த நூற் பரீட்சை. இந்தப் பரீட்சையை நடத்துவதற்கு பாடநூல் முக்கியமானது. பாடநூல் மாணவர்களிடம் இல்லாது விட்டால், எதனை ஆதாரமாகக் கொண்டு நடத்துவது. அத்தோடு இன்றைய கற்றல் - கற்பித்தல் முறைகள் மாணவர் மையமாக அமைந்து கொள்ள வேண்மென கல்வியமைச்சு பெரிதும் வலியுறுத்துகின்றது. மாணவர்களிடம் பாடநூல்கள் இல்லாவிட்டால் யாது செய்யலாம்? ஆசிரியர்மைய முறையில் விரிவுரையைத்தானே நடத்த வேண்டும்.

இவ்வாறாக மாணவர்கள் எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினையாக இலவசப் பாடநூல் விநியோகம் காணப்படும் போது, நாம் நாளாந்தம் புதிய கல்விக் கொள்கைகள், புதிய கல்விச் சீர்திருத்தம் என கல்வியில் பல்வேறு விடயங்களைப் பற்றி அலட்டிக் கொள்வதில் அர்த்தமில்லை. எனவே, மாணவர்கள் நீண்ட காலமாக எதிர்நோக்கிவரும் பிரச்சினைக்கு உரிய தீர்வைவைப் பெற சம்பந்தப்பட்ட கல்வி அதிகாரிகள் அரசினதும், கல்வி அமைச்சினதும் கவனத்துக்குக் கொண்டு வருவார்களா? அல்லது இந்தப் பிரச்சினையை இப்படியே கைவிட்டு விடுவார்களா?

**கா.நிமலன் - வ்ரணி**

# தூக்குமரத்தின் கதை!

"தூக்குமரம்"

அது இன்று மீண்டும் சமுதாயத்தில் மிகவும் பேசப்படுகின்ற ஒரு தலையங்கமாகும்.

தூக்குத் தண்டனையை நடைமுறைப்படுத்துவதற்கு ராஜபக்ஷவின் அரசு தீர்மானித்திருப்பதாக தெரிந்து கொள்ளக் கிடைத்தமை இந்த சம்பாசனைக்கு அடிப்படையாக உள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ அரசின் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடந்த நாட்களில் மக்கள் மேடைகளில் குறிப்பிட்டது போல, தூக்குமரம் மீண்டும் செயற்படவுள்ளது போதைப் பொருட்கள் குற்றம் தொடர்பான குற்றவாளிகளுக்கு எதிராகவே. அவர்கள் சொல்கின்ற விதமாக இந்த வருடத்துக்குள்ளேயே மரணதண்டனை நிறைவேற்றுவதை ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது.

அதற்கு தேவையான பின்னணியைத் தயாரிக்கும் நோக்கத்துடன் போலும் போதைப் பொருட்கள் குற்றங்கள் தொடர்பான வழக்குகளை விரைவாக விசாரணை செய்து முடிப்பதற்கு வேறாக நீதிமன்றங்களை அமைப்பதற்கு நீதி அமைச்சின் கவனம் திரும்பியுள்ளது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சமீபத்தில் நீதிபதிகளை சந்தித்த சந்தர்ப்பத்தில் இது பற்றிய தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

போதைப் பொருட்கள் தொடர்பாக மரணதண்டனை விதிக்கப்படுவதற்கு மேலதிகமாக பெண்கள் பாலியல் வல்லுறவு மற்றும் மனிதக் கொலைகளுக்கு எதிராகவும் தூக்குத் தண்டனை செயற்படுத்தப்பட இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. இவையெல்லாம் தற்பொழுது பேச்சு வார்த்தை மட்டத்திலேயே இருக்கின்றது. இன்னமும் இது பற்றிய பொது இணக்கப்பாட்டுக்கு வரவில்லை.

தூக்குத்தண்டனை நிச்சயமாக சமீபத்தில் செயற்படுத்தப்படுமாயின் அது செயற்படுத்தப்படுவது எந்த விதமாக? என்றிலிருந்து? மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள சிறைக் கைதிகள் தூக்கில் தொங்கவிடப்பட்டு கொல்லப்படுவார்களா? எவர்களில் இருந்து முதலில் தூக்கிலிடுவதற்கு தேர்ந்தெடுக்கப்படுவார்கள்? என்னும் பல வினாக்களுக்கு விடைகளைக் கண்டறிவதற்கு நேர்ந்துள்ளது.

'தூக்குமரத்தை செயற்படுத்துவதற்கு நாங்கள் எந்த வேளையிலும் ஆயத்தம். தேவைப்படுவது அதற்கான உயர் ஆணை மாத்திரமே' எனக் கூறுகின்றார் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் றூமி மர்சூக்.

மரணதண்டனை செயற்படுத்தப் படுமாயின் தற்பொழுது மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களை அது பாதிக்காது. மரண தண்டனை செயற்படுத்தப்படவுள்ள நாளில் இருந்து இனிமேல் தண்டனை பெறுவர்களை மாத்திரமே அதுபாதிக்கும் என்றும் றூமி மர்சூக் தெரிவித்தார்.

'தூக்குத்தண்டனை செயற்படுத்தப்படுவது பல தடவை தாமதமாகியது. ஆனால் இந்த முறை என்றால் அது செயற்படுத்தப்படும்' எனத் தெரிவித்தார் நீதி அமைச்சின் செயலாளர் சுஹத கம்லத். சிறைச்சாலைகள் நீதி அமைச்சின் கீழேயே இயங்குகின்றன. அதன் செயலாளர் சுஹத கம்லத் 'தூக்குமரத்துக்குப் பாவிக்கும் கம்பாங்கயிறும் இப்பொழுது கிடைத்துள்ளது' என்றும் தெரிவித்தார்.

'முதலில் எங்களுக்கு பாகிஸ்தானில் இருந்து அன்பளிப்பாகக் கம்பாங்கயிறு கிடைத்தது. அதற்கு பின்பு வர்த்தக முறைமைப்படுத்தல் கூட்டுத்தாபனமும் கம்பாங்கயிறை இறக்குமதி செய்து எங்களுக்கு அன்பளிப்பாக வழங்கியது. அந்த இரு கம்பாஸ்கயிறுகளையும் நாங்கள் பரிசோதித்துப் பார்த்தோம். அதன் போது தூக்குமரத்துக்கு மிகவும் பொருத்தமான கயிறாக வர்த்தக முறைமைப்படுத்தல் கூட்டுத்தாபனம் அன்பளிப்புச் செய்த கம்பாங்கயிறே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது' எனத் தெரிவித்தார் சிறைச்சாலை அதிகாரி குணரத்ன குருப்பு.

இவை எப்படியிருப்பினும் உயர் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய கடந்த 2004 நவம்பர் 19ஆம் திகதி பாதாள உலகத்தவர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட பின்பு தான் தூக்கு மரம் பற்றிய பலசம்பாசணைகள் நாட்டில் ஏற்பட்டன. நீதிபதி கொல்லப்பட்டு 24 மணிநேரம் கழிவதற்கு முன்பே அப்பொழுது அதிகாரத்தில் இருந்த சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க வெளியிட்ட அறிக்கையிலும் தூக்குத் தண்டனையைச் செயற்படுத்தப் போவதாகத் தெரிவித்திருந்தார்.

அதனுடன் சிலந்தி வலைகள் பின்னப்பட்டிருந்த, தூசிகள் பிடித்திருந்த வெலிக்கடை சிறைச்சாலையினதும், கண்டி போகம்பரைச் சிறைச்சாலையினதும் தூக்குமரங்கள் சிறைச்சாலை அதிகாரிகளால் அவசர அவசரமாக சுத்தம் செய்யப்பட்டன. அப்பொழுது தூக்குமரத்தில் இருந்த கம்பாங்கயிறு பெல்ஜியத்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டது. ஒன்று 95 ஆயிரம் ரூபா பெறுமதியானவை. அந்தக் கம்பாங்கயிறு அப்பொழுது பாவனைக்கு உகந்த விதமாக இருக்கவில்லை. ஆகையால் தூக்குமரத்துக்கு புதிய கம்பாஸ்கயிறை விலைக்குப் பெற்றுக் கொள்வதற்கு, கேள்விப்பத்திரம் கோருவதற்கு அதிகாரிகள் நடவடிக்கைகள் எடுத்தார்கள்.

ஆனால், அந்தக்காலத்தில் கம்பாங்கயிற்றை விலைக்குப் பெற்றதாக இல்லை. கம்பாங்கயிற்றை எந்த நாட்டில் இருந்து விலைக்குப் பெறுவது எனத்தீர்மானிப்பதற்கு இயலாமல் காலம் கழிந்தது.

மரண தண்டனை விதிக்கப்பட்ட சிறைக்கைதி ஒருவனை தூக்கில் தொங்கவிட்டு மரணமடையச் செய்வது 'அலுகோசு' என்பவனால். அதற்கு உதவி செய்வதற்கு அவனுக்கு உதவியாளும் ஒருவன் இருக்க வேண்டும். நீதிபதி அம்பேபிட்டிய கொல்லப்பட்டதுடன் தூக்குமரம் பற்றிய சம்பாஷணைகள் ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் சிறைச்சாலையில் 'அலுகோசு ஒருவன் மாத்திரமே இருந்தான் உதவியாளனும் அவனுக்கு இருக்கவில்லை' 'அலுகோசு' பதவியில் இருந்தவனும் இருபத்தைந்து வயது இளைஞன். அவனது தந்தையிடமிருந்தே அவனுக்கு அந்த பதவி கிடைத்திருந்தது. அந்தப் பதவி பரம்பரை பரம்பரையாய் வரும் ஒன்று.

'அலுகோசு' பதவியில் இருக்கும் இளைஞன் ஒரு காலத்தில் அவனது தந்தைக்கு உதவியாளாக இருந்தவன். தந்தையின் மரணத்தின் பின்பு அவனுக்கு அலுகோசு பதவி உரித்தாயிற்று. இன்னமும் திருமணம் செய்து கொண்டிராத தற்போதைய 'அலுகோசு'வுக்கு அவனது உதவிக்கென யாரும் இல்லை. இதனால் உதவி அலுகோசுவின் பதவி வெற்றிடமாகவுள்ளது.

நீதிபதி கொலையைத் தொடர்ந்து அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு நேர்முகப் பரீட்சையை நடத்துவதற்கும் சிறைச்சாலை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தார்கள். அப்பொழுது அந்தப் பதவிக்கு விண்ணப்பித்தது ஒரேயொரு விண்ணப்பதாரி மாத்திரமே. அவனும் இளைஞனான 'அலுகோசுவின்' உறவினன். அப்படியே அவனும் இளம் பராயத்தினன்.

அந்தக் காலத்தில் அந்த இளைஞன் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியிருந்தாலும், இன்னமும் அந்த வெற்றிடத்தை நிரப்புவதில் சிறைச்சாலை அதிகாரிகள் வெற்றியடையவில்லை. மரணதண்டனை நிறைவேற்றம் என்பது சொற்களில் மாத்திரமே வரையறை செய்யப்பட்டிருப்பதே அதற்கான காரணமாகும்.

இனோகா செவ்வந்தி கொலைகாரர்கள், ரீட்டா ஜோன் கொலைகாரர்கள், சதீப லஷான் கொலைகாரர்கள் மற்றும் கோக்கந்தரவில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறுபேர்களைக் கொன்ற கொலைகாரர்களை முதலில் தூக்கிலிட்டுக் கொல்ல வேண்டும் என்ற பேச்சுக்கள் அந்தக் காலத்தில் நாட்டில் ஏற்பட்டிருந்தது. அதற்கு முன்பு உயர் நீதிமன்ற நீதிபதியைக் கொன்றவர்களை தூக்கில் போடவேண்டும் என்றும் கூறப்பட்டது.



அந்தக் காலத்தில் இவை அனைத்துமே சொற்களிலே அல்லது கடதாசித்துண்டில் மாத்திரமே வரையறை செய்யப்பட்டிருந்தது. ஆகக்குறைந்தது நீதிபதியைக் கொன்றவர்களை யாவது தூக்கிலிடுவதற்கும் அதிகாரிகள் அக்கறை காட்டவில்லை. நீதிபதி கொலையின் சூடு சமுதாயத்திலிருந்து குறைந்துபோக தூக்கு மரச் செயற்பாடும் மறந்துபோயிற்று.

தூக்கு மரம் செயற்படுத்தப்படுவது பற்றி தற்பொழுது பேசப்படுவது 'மஹிந்த சிந்தனையின் கருத்துக்கு முற்றுப் புள்ளி' வைக்கும் நடவடிக்கை பற்றியே. போதைப் பொருள் வர்த்தகம், புற்று நோய் போன்று சமூகம் பூராவும் வேகமாகப் பரவிச் செல்வது அதற்குக் காரணம் என்பதில் சந்தேகமில்லை.

போதைப்பொருள் வர்த்தகர்களுக்கு மரணதண்டனை வரை தண்டனைகள் வழங்கப்பட வேண்டும் என்ற விதமாக இந்த நாட்டின் சட்டம் திருத்தப்பட்டது 1984 ஆம் ஆண்டிலேயே.அன்றிலிருந்து இன்று வரை போதைப்பொருள் வர்த்தகம் தொடர்பாக மரணதண்டனை விதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை நாற்பத்தொன்பதாகும். இதில் ஒன்பதுபேர் வெளிநாட்டவர்கள் இவர்களில் ஒரு பெண்மணியும் உள்ளார்.

பாகிஸ்தானியர்கள் மூவர், இந்தியர்கள் நால்வர், அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த ஒருவர், பிரான்ஸைச் சேர்ந்த ஒருவர் என இந்த நாட்டில் மரணதண்டணை விதிக்கப்பட்டவர்களில் உள்ளனர்.

இவர்களில் அநேகமானோர் தற்பொழுது பொது மன்னிப்பின் கீழ் அவர்களது மரண தண்டனையில் இருந்து ஆயுள் தண்டனையாகவும், அதிலிருந்து சாதாரண சிறைத் தண்டனையாகவும் குறைக்கப்பட்டவர்களாவர்.

தற்பொழுது மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை எண்பத்தாறாகும். கொலைகள் புரிந்தோர், மற்றும் பெண்கள் மீதான பாலியல்வல்லுறவுக் குற்றவாளிகள், போதைப்பொருள் வர்த்தகர்கள் என்போர் இப்படி மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள சிறைக் கைதிகளிடையே உள்ளனர். இந்தச் சிறைக் கைதிகள் வெலிக்கடை மற்றும் போகம்பரைச் சிறைச்சாலைகளில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் அறுபத்தெட்டுப்பேர் வெலிக்டைச் சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

(தொடரும்)

தமிழில்

**வல்வையூரான்**

# அமெரிக்காவைக் கண்டித்து...

எதனையுமே குறிப்பாக, துணைக் குழுக்களின் ஆயுதக் களைவு, அதி உயர் பாதுகாப்பு வலயம் அகற்றல், மீன்பிடித் தடை உள்ளிட்ட தமிழர் தொழில் செயற்பாடுகளுக்கான சுதந்திரம் ஆகியவற்றை 4 ஆண்டு காலமாகியும் இலங்கை அரசாங்கம் செயற்படுத்தவில்லை என்பதால் தமிழ்மக்கள் நம்பிக்கை இழந்துநிற்கின்றனர் என்று தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தெரிவித்தார்.

தென் அமெரிக்க நாடுகளில் சோசலிச அரசாங்கங்கள் அமைக்கப்பட்டு வரும் நிலையில் - விடுதலைப் புலிகளும் அந்த அரசாங்கங்களுக்கு ஆதரவு நீட்டிவருவதையும் விடுதலை க.இராசேந்திரன் சுட்டிக்காட்டினார்.

அமெரிக்கா உள்ளிட்ட எந்த நாடுகள் அச்சுறுத்தினாலும் அவற்றில் வாலை ஒட்ட நறுக்கும் ஆற்றல் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் தமிழினத்துக்கும் உண்டு என்று விடுதலை சிறுத்தைகள் இயக்க பொதுச் செயலாளர் தொல்.திருமாவளவன் தெரிவித்தார்.

அமெரிக்காவின் கீழுள்ள தென் அமெரிக்க நாடுகளில் பொலிவியா உள்ளிட்ட தேசங்களில் சோசலிச அரசுகள் கோலோச்சுகின்றபோது ஈழத் தமிழர்களை அமெரிக்கா எதிர்க்கிறது என்றால் - தமிழீழத்தையும் சோசலிச நாடுகளின் அணியில்தான் அமெரிக்கா கருதுகிறது என்று தமிழ் தமிழர் இயக்கத்தின் பொதுச் செயலாளர் தியாகு தெரிவித்தார்.

இந்திய அரசாங்கம் கடந்த ஓராண்டு காலமாக இலங்கை இராணுவத்துக்கு பயிற்சி அளித்துவருகின்றது என்றும், இப்போதும்கூட சென்னை தாம்பரம் விமானப்படை பயிற்சி நிலையத்தில் சிங்கள இராணுவத்துக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது என்று மார்க்சிய பெரியாரிய பொதுவுடமைக் கட்சியின் தலைவர் வே.ஆனைமுத்து குற்றம்சாட்டினார்.

தேசிய இன விடுதலைப் போராட்டத்தை ஒரு சந்தைப் பொருளாக அமெரிக்கா பார்க்கிறது. தேசிய இன விடுதலை விழுமியத்தை அமெரிக்கா விழுங்கப் பார்க்கிறது. அமெரிக்காவின் பாதகத்துக்குக்கீழ் இலத்தீன் அமெரிக்க நாடுகள் கிளர்ந்தெழுந்துள்ளன.

உலகம் முழுவதும் விடுதலை விரும்பும் நாடுகள் ஒன்றுபட்டு நிற்கின்றன. உலகம் முழவதும் விடுதலைப் போராட்டத்தை இடதுசாரிகள் ஆதரிக்கின்றனர். ஆனால், ஈழத்தையும் இடதுசாரிகள் ஆதரிக்கவேண்டும். தமிழக இடதுசாரிகள் சிங்கள ரத்னா விருதுபெற்ற இந்து ராமின் அணுகுமுறையை பின்பற்றக்கூடாது. இந்த நாட்டில் குறைவான எண்ணிக்கையில் இருப்போருக்கான நலன்தான் அவரது அணுகுமுறை என கவிஞர் இன்குலாப் தெரிவித்தார்.

அமெரிக்கத் தூதுவரின் அச்சுறுத்தும் உரையைக் கண்டித்தும், ஈழத்தமிழர்களின் விடுதலைக்கு என்றென்றும் உறுதுணையாக இருப்போம் என்பதையும் வலியுறுத்தி ஆர்ப்பாட்ட முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

சுமார் 2 மணிநேரம் நடைபெற்ற இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் 30 இற்கும் மேற்பட்ட இயக்கங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் பங்கேற்று தமிழீழ விடுதலைக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகவும், ஈழத்தமிழர்களை அச்சுறுத்தும் வகையில் உரையாற்றிய அமெரிக்கத் தூதுவரைக் கண்டித்தும் கண்டன முழக்கங்களை உரத்த குரலில் எழுப்பினர்.


இத்தகைய ஆர்ப்பாட்டங்கள் தஞ்சாவூரில் தமிழ்த் தேசப் பொதுவுடமைக் கட்சியின் பொதுச் செயலாளர் பெ.மணியரசன் தலைமையிலும், மதுரையில் தமிழ்த் தேசிய இயக்கப் பொதுச் செயலாளர் பரந்தாமன் தலைமையிலும், கோயம்புத்தூரில் தந்தை பெரியார் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கோவை.கு.இராமகிருஷ்ணன் தலைமையிலும் நடைபெற்றன.

எதிர்வரும் 30 ஆம் திகதி சேலத்தில் தந்தை பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் தா.சே.மணி தலைமையில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவரைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.


நிறைஞ்சனாஸ் சங்கானை
கமல், அர்ஜுன், கௌதமி
மற்றும் பலர் நடித்த
குருதிப் புனல்
காட்சிகள் 11.00,2.30,5.30 (பு.நே)


# எந்தக் கட்சிகளுக்கும் எமது இரத்தம் சேரும்!

## ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ



சென்னை—

என்னை விட இயக்கம் உயர்ந்தது. எந்தக் கட்சிக்காரருக்கும் எங்கள் இரத்தம் சேரும். யாருக்குத் தேவைப்படுகிறதோ அவர்களுக்குக் கொடுப்போம் என்று ம.தி.மு.க. பொதுச்செயலர் வைகோ - தேர்தல் கூட்டணி குறித்து சூசகமாகப் பேசியுள்ளார்.

தென் சென்னை மாவட்டத்தின் ம.தி.மு.க. சார்பில் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் மாவட்டச் செயலர் வேளச்சேரி மணிமாறன் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் வைகோ பேசியதாவது-

ம.தி.மு.க. என்றாலே இளைஞர் பட்டாளம் கொண்ட இயக்கம். தன்னலமற்ற பொதுநலன் கொண்ட தொண்டர்கள் இந்த இயக்கத்தில் உள்ளனர்.

13 ஆண்டுகள் பல வேதனைகள், சோதனைகளையும் தாண்டி இலட்சியத்துக்காகவும், கொள்கைக்காகவும் பணியாற்றி வருபவர்கள் இயக்கத்தில் உள்ளனர்.

ம.தி.மு.க. எந்த இலட்சியத்தை நோக்கி பயணிக்கின்றதோ, அந்தப் பாதையை விட்டு விலகவில்லை. அரசியல் சட்ட எரிப்பு போராட்டம் எனது தலைமையில் நெல்லையில் நடைபெறும் என தி.மு.க. அறிவித்தது. ஆனால், முரசொலியில் எனது பெயர் இடம்பெறவில்லை.

இது குறித்து அப்போது கருணாநிதியிடம் கேட்டபோது, போராட்டத்தில் கலந்துகொண்டால் உனது எம்.பி. பதவி போய்விடும் என்று அவர் கூறினார். போராட்ட விளம்பர போஸ்டர்களில் எனது பெயர் இடம்பெற்றுள்ளது. பதவி முக்கியம் இல்லை. நான் போராட்டத்தில் ஈடுபடுவேன். என்று கருணாநிதியிடம் கூறினேன்.

ம.தி.மு.க. பொதுச் செயலராக தொண்டர்கள் என்னைத் தேர்வு செய்துள்ளனர். உங்கள் நலனே என்னுடைய நலன். நீங்கள் மகிழ்ச்சியடைந்தால் நான் மகிழ்ச்சியடைவேன். அதற்கு என்ன விலை கொடுத்தாலும் பரவாயில்லை.

நீங்கள் தலை நிமிர வேண்டும். நான்கு பேர் உங்களை நகையாடக் கூடாது. அமைச்சர்கள், எம்.எல்.ஏக்கள் நாற்காலி மட்டும் நமக்கு முக்கியம் அல்ல. நம்மிடம் இலட்சிய உணர்வு உள்ளது. இந்த இயக்கத்தை வளர்க்கப் பாடுபட்டுள்ளோம்.

என்னை மலை உச்சியிலிருந்து தூக்கியெறிந்தார்கள். அப்போது குழந்தையை மடியில் தாங்கும் தாய் போல் என்னைத் தாங்கினீர்கள். என் போன்றவர்கள் நிரந்தரமானவர்கள் அல்ல. என்னைவிட இந்த இயக்கம் தான் உயர்ந்தது. என்னைவிட இந்த இயக்கத்திலுள்ள தொண்டர்களின் நலன்தான் முக்கியம். தோற்பதை, வெல்வதை ஒரே மாதிரியாக எடுத்துக்கொள்ளவேண்டும்.

நீ பட்டறையாய் இருக்கும்போது அடி வாங்கிக்கொண்டு இரு. சம்மட்டியாய் ஆகும்போது அடி கொடு. துயர்படும் மக்களுக்கு இனம், மதம் பார்க்காமல் ம.தி.மு.க.வினர் இரத்தம் கொடுக்கின்றனர். நான்கு மாதம் முன்பு ஓ பொசிட்டிவ் இரத்த வகை பற்றிப் பேசினேன். அப்பொழுது விமர்சனம் எழுவில்லை. இப்பொழுது விமர்சனம் எழுந்துள்ளது.


எங்களிடம் அனைத்து வகையான இரத்தமும் உடனே கிடைக்கும். நாங்கள் ஆவணம் தயாரித்து இரத்தத்தைக் கொடுக்கிறோம். அடையாறு புற்றுநோய் மருத்துவமனையில் எட்டுப் பேருக்கு நடந்த சத்திர சிகிச்சையில் நான்கு பேருக்கு அபூர்வ வகை இரத்தத்தை ம.தி.மு.கவினர் கொடுத்து அவர்களைக் காப்பாற்றியுள்ளனர். இந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் எல்லோருக்கும் எங்கள் இரத்தம் சேரும். எந்தக் கட்சிக்காரர்களுக்கும் சேரும். யாருக்குத் தேவைப்படுகிறதோ அவர்களுக்கு நாங்கள் கொடுப்போம்.

சிங்கள இன வெறியர்களால் ஈழத் தமிழர்கள் 50 ஆண்டுகளாக இன்னல்களுக்கு ஆளாகி வருகின்றனர். முன்பு இலங்கை இராணுவத்துக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையேதான் போர் இருந்தது. இப்பொழுது சிங்கள் இனவெறியர்களும், இலங்கை இராணுவத்துடன் சேர்ந்துள்ளனர்.

புலிகளுக்கும், இலங்கை அரசாங்கத்துக்கும் இடையே நோர்வே நாட்டு அமைதிக்குழு பேச்சுவார்த்தை நடத்திவருகிறது. அதை ஏற்க மகிந்த ராஜபக்ஷ அரசு ஏன் முன்வரவில்லை என இந்தியா கேட்க வேண்டும். இலங்கையில் போர் ஏற்படக் கூடாது என்ற கவலையில் இருக்கிறேன். போர் மூண்டால் அதற்கு முழுப் பொறுப்பையும் இலங்கை அரசுதான் ஏற்க வேண்டும்.

பீகாரில் சட்டசபையை கலைத்தது தொடர்பாக மேல்நீதிமன்ற தீர்ப்பை மதித்து கவர்னர் பூட்டாசிங் நடக்க வேண்டும். தி.மு.க கூட்டணியில் ம.தி.மு.க இன்னமும் இருந்து வருகிறது. தொகுதிப்பங்கீடு குறித்து பின்னர் அறிவிக்கப்படும் என்று வைகோ.கூறினார்.

# நடிகர் விஜயகாந்தின் கட்சியை தேர்தல் ஆணைக்குழு அங்கீகரித்தது!



சென்னை—

நடிகர் விஜயகாந்த் சமீபத்தில் ஆரம்பித்த தேசிய முற்போக்கு திராவிடர் கழகத்தை தேர்தல் ஆணைக்குழு அங்கீகரித்தது. விஜயகாந்த் சமீபத்தில் முற்போக்கு திராவிடர் கழகம் என்ற புதிய அரசியல் கட்சியை ஆரம்பித்தார்.

தனது கட்சி தேர்தலில் தனித்து போட்டியிடும் என்று கூறியுள்ள அவர், மாநிலம் முழுவதும் தீவிர சுற்றுப்பயணம் செய்து தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருக்கிறார்.

தேசிய முற்போக்கு திராவிடர் கழகத்துக்கு முறைப்படி அங்கீகாரம் பெறுவதற்காக மத்திய தேர்தல் ஆணைக்குழுவிடம் விஜயகாந்த் மனு செய்திருந்தார். அதற்குத் தேவையான ஆவணங்களையும் அவர் தாக்கல் செய்தார்.

ஆனால், கட்சியின் விதிமுறைகள் பற்றி சில திருத்தங்கள் செய்யவேண்டும் என்று தேர்தல் ஆணைக்குழு கூறியது. இதனால் அங்கீகாரம் பெறுவதில் தாமதம் ஏற்பட்டது. இதையடுத்து கட்சியின் விதிமுறைகளில் திருத்தங்கள் செய்யப்பட்டன. அதன் அடிப்படையில் அங்கீகாரம் கேட்டு மீண்டும் விண்ணப்பிக்கப்பட்டது.

தேசிய முற்போக்கு திராவிடர் கழகம் சார்பில் கொடுக்கப்பட்ட திருத்த ஆவணங்களைப் பரிசீலித்த தேர்தல் ஆணையகம் - அந்தக்கட்சிக்கு அங்கீகாரம் அளித்து விட்டதாகத் தெரிகிறது. தலைமைத் தேர்தல் ஆணைக்குழு வட்டாரங்களில் இருந்து இந்த தகவல் தெரியவந்துள்ளது.

# மரண அறிவித்தல்



## திரு.விநாசித்தம்பி சோமசுந்தரம்

(பிரபல தொழிலதிபர் - கொட்டடி மரக்காலை, City Hardware, City Steels - Stanly Road, Jaffna, City Transport Service - Central Road Colombo - 12, பங்காளர் எஸ்.அருணாசலம் செட்டியார் அன்சன்ஸ் 165, 5 ஆம் குறுக்குத்தெரு, கொழும்பு - 11)

புங்குடுதீவு 12 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 119, பிறவுண்வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும், தற்போது கொழும்பு 26/5, லோறிஸ் வீதி, பம்பலப்பிட்டியில் வசித்தவருமாகிய பிரபல தொழிலதிபர் விநாசித்தம்பி சோமசுந்தரம் 25.01.2006 இல் காலமானார். அன்னார் சிறிதேவியின் (நாகம்மா) அன்புக் கணவரும், கேதீஸ்வரன் (சுவிஸ்), ஆனந்தகௌரி(சுவிஸ்), ஜெகதீஸ்வரன், பிரகதீஸ்வரன், மனோகௌரி (கனடா), அமிர்தகௌரி (ஆசிரியை), ஜெயகௌரி (சங்கீத ஆசிரியை - சைவப்பிரகாச வித்தியாலயம் - வேலணை) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், செல்வி, நீதிராஜா, சசி, சந்திரா, ரூபகாந்தன், யோகமோகன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சஜனி (கண்ணம்மா), தினேஷ், திருஷா, கருஷன், சஞ்சயன், ஆதித்தன், ஆரணியன், அருண், பிரவீனா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களாகிய சிவபாக்கியம், ஆறுமுகம், காராளபிள்ளை, பசுபதிப்பிள்ளை, சிவக்கொழுந்து மற்றும் சின்னத்தங்கம் மற்றும் நாகம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற கந்தையா (ஆசிரியர்) சறோஜினி, இரத்தினம், இராசமணி, முத்தையா ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் ஈமக்கிரிகைகள் 29.01.2006 (ஞாயிற்றுக்கிழமை) அன்னாரது இல்லத்தில் முற்பகல் 8 மணிக்கு நடைபெற்று, முற்பகல் 10 மணிக்கு பூதவுடல் பொரளை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள் கிறோம்.

No.26/5, Loures Road
Bambalapitya.
T.P - 2589701

தகவல்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்

(2174)


ராஜா யாழ்ப்பாணம்




காட்சி : பு.நே. 10.30, 2.15 மட்டும்.
ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

மனோகரா யாழ்ப்பாணம்




தயாரிப்பு - S.A சந்திரசேகர் இசை -வித்தியாசாகர்
(இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு)
காட்சிகள்;- 10.30, 1.30, 4.30, 7.30. (புதிய நேரம்)

நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)

அல்டிமேட் ஸ்ரார் அஜித், லைலா, விவேக், பிரகாஸ்ராஜ் நடித்த

பரமசிவன்



அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்க நேரம் மாற்றப்பட்டுள்ளது.

காட்சிகள்;- 10.30, 2.30 (புதிய நேரம்)

UNIVERSITY OF CAMBRIDGE
ENGLISH EXAMINATIONS

திருநெல்வேலி BRITISH COLLEGE OF ENGLISH கல்லூரியில் Cambridge, பல்கலைக் கழகத்தின் ஆங்கிலப் பாடநெறிகளைப் பின்பற்றி 28.11.2005 இல் University of Colombo இல் நடைபெற்ற University of Cambridge இன் PRILIMINARY ENGLISH TEST இல் சித்தியடைந்த சாதனையாளர்கள் வருமாறு :



R.THAYANITY
KARAVEDDY



R.SHALINI
JAFFNA



V.S.PIRASANNA
JAFFNA



P.SUTHAGINI
JAFFNA



N.SIYAMALAN
JAFFNA (NF)



M.MAYOORAH
JAFFNA (NF)



K.GUNAALAN
KARAVEDDY (NF)



12th January இல் British Council Colombo இல் நடைபெற்ற IELTS பரீட்சையில் எமது கல்லூரியில் பயின்ற Mas.S.Nimalan, Thirunelvely, Band - 7 எடுத்துச் சித்தியடைந்துள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

2006 ஆம் ஆண்டு June 10 ஆம் திகதியில் நடைபெற இருக்கும் University of Cambridge இன் ஆங்கிலப் பரீட்சைகளான PRILIMINARY ENGLISH TEST (PET) FIRST CERTIFICATE IN ENGLISH (FCE) பரீட்சைகளுக்கான வகுப்புக்கள் இப்போது நடைபெறுகின்றன. இன்றே ஒரு வகுப்பில் சேர்ந்து உங்கள் ஆங்கில அறிவைக் கூட்டிக்கொள்வதோடு, ஓர் சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழையும் பெற்றுக்கொள்ளுங்கள். IELTS வகுப்பில் எப்போது வேண்டுமானாலும் சேர்ந்துகொள்ளலாம்.

விபரங்களுக்கு :

BRITISH COLLEGE OF ENGLISH

இல. 14, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
(திருநெல்வேலிச் சந்திக்கும் கல்வியங்காட்டுக்கும் இடையே). தொ.பே : 077 9179476.

CAMBRIDGE ESOL WEBSITE : www.cambridge.esol.org

[C/5043]

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# பேச்சுக்கள் தொடங்கும் சூழலில் அகதிகளாக வரத்தேவையில்லை

## சென்னையில் இலங்கை பிரதித் தூதுவர்

கொழும்பு—

இலங்கையில் சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கும் சூழல் உருவாகியுள்ளதால் - அங்கு போர் ஏற்படக் கூடிய வாய்ப்பில்லை.

எனவே, ஈழத் தமிழர்கள் அச்சமடைந்து தமிழகத்துக்கு அகதிகளாக வரவேண்டிய அவசியமெல்லையென இந்தியாவுக்கான இலங்கை பிரதித் தூதுவர் சுமித்நாகலந்த தெரிவித்தார்.

சென்னையில் ஊடகவியலாளர்களிடம் பேசிய அவர் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கையிலுள்ள அனைத்துத் தரப்பு மக்களதும் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் வகையில் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஏற்பட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முயற்சி மேற்கொண்டு வருகிறார்.

தடுத்துவைத்திருந்த அதிகாரிகளை விடுதலைப் புலிகள் விடுதலை செய்துள்ளதை எமது அரசாங்கம் வரவேற்கிறது.

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மீண்டும் பேச்சுக்கள் ஆரம்பமாகவுள்ளதை அமெரிக்கா, சுவிற்சர்லாந்து போன்ற நாடுகள் வரவேற்றுள்ளன.

இந்தப் பேச்சுக்கள் எப்போது ஆரம்பமாகும் என்ற கால அட்டவணை இன்னமும் முடிவு செய்யப்படாத போதும் அடுத்த மாத நடுப்பகுதியில் நடைபெறுமென நம்புகிறோம்.

ஜெனிவாவில் நடைபெறவுள்ள முதல் கட்டப் பேச்சுக்களின்போது போர்நிறுத்த ஒப்பந்தம் குறித்து ஆய்வு செய்யப்படும். இந்தப் பேச்சுக் களில் நல்ல முடிவு ஏற்படுமென எதிர்பார்க்கிறோம்.

பேச்சுக்களுக்கு ஜே.வி.பி எந்த வித பாதிப்பும் ஏற்படுத்தாது.

விடுதலைப் புலிகளுடன் நடத்தப்படவுள்ள பேச்சுக்களுக்கு தென்னிலங்கையில் உள்ள கட்சிகளின் ஆதரவை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பெற்றுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவியேற்றதை அடுத்து இலங்கையில் போர் வெடிக்கும் சூழ்நிலை உருவாகியிருப்பதாக கூறப்படுவதில் எந்த உண்மையுமில்லை.

எனவே தமிழ்மக்கள் அச்சமடைந்து தமிழகத்துக்கு அகதிகளாக வரவேண்டிய அவசியமில்லை.

மகிந்த ராஜபக்ஷ கிராமத்தில் பிறந்தவர். அவருக்கு மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினை குறித்து நன்கு தெரியும். இலங்கையில் அமைதியை நிலைநாட்ட அவர் முயற்சி செய்வார்.

இலங்கையிலிருந்து தமிழகத்துக்கு அகதிகள் வருவது துரதிர்ஷ்டவசமானது. இந்த ஆண்டு இதுவரை 285 பேர் அகதிகளாக தமிழ்நாட்டுக்கு வந்துள்ளனர். இங்குள்ள அகதிகளை மீண்டும் இலங்கைக்கு அழைத்துச் செல்வதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். கடந்த 3 ஆண்டுகளில் 4500 பேர்வரை இலங்கை திரும்பியுள்ளனர்.

இன்னும் அதிகளவானோரை இலங்கைக்கு அழைத்துச்செல்ல நடவடிக்கை எடுத்து வருகிறோம். அகதிகள் பிரச்சினையில் இந்திய அரசுக்கு சுமையாக இருக்க இலங்கை விரும்பவில்லை.

மீன்பிடியில் ஈடுபடும் தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் தாக்கப்படுவதாகவும் அவர்களின் வலைகள் அறுத்து வீசப்படுவதாகவும் எம்மிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது சிக்கலான பிரச்சினையாகும் இதற்குத் தீர்வுகாண பல ஆண்டுகளாக முயற்சி மேற்கொண்டு வருகிறோம்.

1976 ஆம் ஆண்டு கடல் எல்லையை மாற்றியமைத்ததிலிருந்து இந்தப் பிரச்சினை நீடித்துவருகிறது. இதற்குத் தீர்வுகாண முயற்சி மேற்கொள்ளப்படுமென அவர் மேலும் தெரிவித்தார்.



அன்ரன் பாலசிங்கம் ஹெலியில் புறப்பட்டுச் சென்ற காட்சி.

# உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ் கட்சிகளுடன் ஐ.தே.க

கொழும்பு—

உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்க் கட்சிகளுடன் சேர்ந்து போட்டியிட ஐக்கிய தேசியக் கட்சி முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மலையகமக்கள் முன்னணி, மேலக மக்கள் முன்னணி, ஆகியகட்சிகளுடன் இது தொடர்பான பேச்சுக்களில் ஐக்கிய தேசியக்கட்சி ஈடுபட்டுள்ளது. வேட்பாளர்களை நிறுத்துவது தொடர்பாக அடுத்த வாரம் முடிவு செய்யப்படவுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலுக்கான ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்கள் தெரிவு அடுத்த மாதம் முதல் வாரத்தில் நடைபெறவுள்ளதுடன், அதற்கான வேட்புமனு சபையும் நியமிக்கப்படவுள்ளதாக கட்சியின் பிரதிப் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

இதனிடையே, உள்ளூராட்சித் தேர்தலை எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக தேர்தல் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

# முஸ்லிம் பிரதிநிதிகளுடன் புலிகள் திருமலையில் சந்திப்பு

திருகோணமலை—

தமிழ் - முஸ்லிம் மக்களிடையே நல்லுறவை வளர்தெடுக்கும் வகையில் விடுதலைப்புலிகளுடன் 20 பேர் கொண்ட முஸ்லிம் குழு நேற்று சந்தித்துப்பேசியது.

திருகோணமலை - மூதூரில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைச் செயலகத்தில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு முன்னிலையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

தமிழ் - முஸ்லிம் மக்களிடையே நல்லுறவை வளர்தெடுக்கும் வகையிலான ஆலோசனைகள் இந்தக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டன.

மூதூர் பிரதேசத்தில் முஸ்லிம் ஆயுதக்குழுக்களின் நடமாட்டங்கள் தொடர்பாக புலிகள் சுட்டிக்காட்டினர்.

கடந்த செவ்வாய்கிழமை மூதூரில் இரண்டு தமிழர்கள் படையினரால் கொல்லப்பட்டது குறித்தும் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

அரச ஆக்கிரமிப்புப் பகுதிகளில் பிரச்சினைக்குத் தீர்வுகாண இருதரப்புக் குழுக்கள் அமைக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் சார்பில் - திருகோணமலை மாவட்ட கட்டளைத்தளபதி கேணல் சொர்ணம், மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் ஆகியோரும் முஸ்லிம்கள் சார்பில் மூதூர், தோப்பூர், ஜின்னா நகர், ஆசாத் நகர் முஸ்லிம் மதத் தலைவர்களும் மற்றும் பொதுமக்கள் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

# மேல் மாகாண முதல்வர் கூரே ஐ.தே.க வில் இணைகிறார்!

கொழும்பு—

மேல் மாகாண முதல்வர் ரெஜினோல்ட் கூரேக்கு எதிராக விசாரணை நடத்த மகிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார். மேல்மாகாண சபையின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மற்றும் ஜே.வி.பி யினர் மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேசினர். இந்தச் சந்திப்பின் போது ரெஜினோல்ட் கூரேயை பதவிநீக்கம் செய்ய அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

ரெஜினோல்ட் கூரே மீதான ஊழல் புகார்கள் தொடர்பான ஆணைக்குழுவின் அறிக்கை அவர் மீது குற்றம் எதுவும் இல்லை என்று தெரிவித்திருந்தது. ஆணைக்குழு அறிக்கை தங்களுக்கு திருப்தி அளிக்கவில்லை என்றும் மகிந்தவிடம் ரெஜினோல்ட் கூரேயின் எதிர்ப்பாளர்கள் தெரிவித்தனர்.

மகிந்தவுடனான சந்திப்புக் குறித்து கருத்துத் தெரிவித்த ஜே.வி.பி தலைவர் வருண ராஜபக்ஷ - கூரே மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க மகிந்த ராஜபக்ஷ ஒப்புக்கொண்டுள்ளதாகத் தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் மைத்திரிபால சிறிசேன இந்த ஒழுங்க நடவடிக்கை தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள கூடும் என்று தெரிகிறது.

இதனிடையே சுதந்திரக் கட்சியிலிருந்து விலகி ஐக்கிய தேசியக் கட்சியில் ரெஜினோல்ட் கூரே இணையக்கூடும் என்று செய்திகள் தெரிவித்தன. ஆனால் ரெஜினால்ட் கூரே இதுவரை எதுவித கருத்தும் தெரிவிக்கவில்லை.என்னும் ஐக்கிய தேசியக் கட்சியின் பல கூட்டங்களில் அவர் கலந்து கொண்டுள்ளார். என்று அவரது எதிர்ப்பாளர்கள் தெரிவித்தனர்.

### துணைவேந்தர்...

புதிய துணைவேந்தரை தெரிவு செய்வதற்காக பரிந்துரைக்கப்பட்ட மூவரில் ஒருவரை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவு செய்வார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பேச்சுக்கான நாள் குறித்த பின்னரே அரசதரப்பு குழு விபரம் வெளிவரும்

கொழும்பு—

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஜெனிவாவில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையில் பங்கேற்பதற்கான அரச தரப்பில் 5 பேர் கொண்ட குழு அறிவிக்கப்படக் கூடும் என்றும் - இந்தக் குழுவில் ஜயந்த தனபால, சமாதான செயலகப் பணிப்பாளர் ஜோன் குணரத்ன ஆகியோர் இடம்பெறக்கூடும் எனவும் கொழும்புத்தகவல்கள் தெரிவித்தன.

பேச்சுவார்த்தைகள் நடைபெறும் இடம் மற்றும் நாள் பற்றிய அறிவிப்பு வெளியான பின்னர் அரசதரப்புக் குழுவில் இடம்பெறும் உறுப்பினர்களின் பெயர் விபரங்கள் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படும்.

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்கள் நடைபெறும் இடம் பற்றி நோர்வே அரசு - சுவிற்சர்லாந்து அரசாங்கத்துடன் பேச்சு நடத்திய பின்னர் பேச்சுக்கான நாள் நிர்ணயிக்கப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

அடுத்த மாதம் 14 ஆம் திகதிக்கும் 21 ஆம் திகதிக்கும் இடையில் பேச்சுக்களை நடத்துவதற்கு தாம் தயாராக இருப்பதாக எரிக் சொல்ஹெய்மிடம் விடுதலைப் புலிகள் தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது.

இந்தப்பேச்சுக்களை 3 நாட்கள் நடத்துவதே சரியானதாக இருக்கும் என்று விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கடந்த ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற பேச்சுக்களில் கலந்துகொண்ட எந்த அரசியல்வாதியும் இந்த அரசாங்கத்துடனான பேச்சுக்களின் போது கலந்து கொள்ளக்கூடாது என எரிக் சொல்ஹெய்மிடம் விடுதலைப் புலிகள் தெரிவித்திருப்பதாகவும் நோர்வேத் தூதரகத்தை மேற்கோள் காட்டி கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

### லண்டன்...

புலிகளின் மூத்த உறுப்பினர் க. வே.பாலகுமாரன், தமிழீழ நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழேந்தி, தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், தளபதிகள் கேணல் தீபன், கேணல் ஜெயம், கேணல் சூசை, கேணல் யாழினி, கேணல் துர்க்கா உட்பட தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள் வழியனுப்பி வைத்தனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து நேற்றுப்பிற்பகல் 2 மணிக்கு கலாநிதி அன்ரன் பாலசிங்கமும் அடேல் பாலசிங்கமும் லண்டனை நோக்கிப் பயணித்தனர்.

காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளுங்கள் 08 ம் பக்கம் பார்க்க

# அமைச்சுக்களை பெறாமல் அரசாங்கத்துக்கு ஆதரவு!

## ஐ.தே.க எம்.பிக்கள் சிலர் முடிவு

கொழும்பு—

அரசாங்கத்தில் எந்த அமைச்சுப் பதவிகளையும் பொறுப்பேற்காமலேயே அரசாங்கத்துக்கு ஆதரவளிக்கப்போவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் முடிவு செய்துள்ளனர்.

ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து மேலும் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சுப்பதவிகள், பிரதி அமைச்சுப்பதவிகளை பொறுப்பேற்றுக்கொண்டு விரைவில் அரசாங்கத்தில் இணையவுள்ளனர்.

மேலும் சில உறுப்பினர்கள் எந்த வித பதவிகளையும் ஏற்காது அரசாங்கத்துடன் இணைந்து ஆதரவளிக்கவுள்ளதாகவும் அலரி மாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன.

ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து அரசாங்கத்துடன் இணையவுள்ள அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் அந்தக்கட்சியின் மாற்றுக் குழுவினராக நாடாளுமன்றத்துக்குள் செயற்படத் தீர்மானித்திருப்பதாகவும் தெரியவருகிறது.

### இருதரப்பும்...

பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதி மரிய செனாரியோ சமாதானப் பேச்சுவார்த்தை வெற்றி பெறுவதற்காக அனைவரும் பிரார்த்திக்குமாறு கேட்டுக்கொண்டார்.

இதேவேளை, இந்த நிகழ்வில் மன்னார் மறை மாவட்ட ஆயர் ராயப்பு ஜோசப், யாழ்ப்பாண ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம், பதுளை மாவட்ட ஆயர் வின்சன்ட் டயஸ், அநுராதபுர ஆயர் நோபட் அந்திராதி உட்பட சுமார் 10 ஆயிரம் வரையிலான பொது மக்களும் பங்கேற்றனர்.

# வட - கிழக்கில்...

வடக்கு - கிழக்கில் அப்பாவித் தமிழ் மக்களை படையினர் சித்திரவதை செய்கின்றனர்.

இது அண்மைக்காலத்தில் அதிகரித்துள்ளது. இந்தப் பிரச்சினைக்கு முகம் கொடுக்குமாறு இலங்கை அரசை நாம் கேட்டுள்ளோம்.

படையினர் மீதான தாக்குதல்களுக்கு பொதுமக்கள் காரணம் என்பதை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. விடுதலைப் புலிகளின் தலையீடு இல்லை என்பதையும் மறுக்க முடியாது.

எது எப்படியாக இருந்தாலும் படையினரின் அடாவடித்தனங்களால் பொதுமக்கள் தான் பாதிக்கப்படுகின்றனர். அரச கட்டுப்பாட்டினுள்ள காட்டுப்பகுதிகளில் புலிகளுக்கெதிரான ஆயுதக்குழுவினர் சுதந்திரமாக நடமாட முடிகிறது.

இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான மோதல் அதிகரிப்பதற்கு இந்த துணை ஆயுதக்குழுக்களே காரணமாக உள்ளன. இதனால் வடக்கு - கிழக்கில் வன்முறைகள் கணக்கின்றி சென்று விட்டன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 29.01.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.